# க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2015

# Marking Scheme

# 21 - பொருளியல்

Curriculum
Assessment & Evaluation
Teaching Learning
N E T S

**ஆய்வு அபிவிருத்திக் கிளை**
**தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

PAPERMASTER.LK

**2.1.3 வினாப்பத்திரம் I இற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

| வினா இலக்கம் | விடை | வினா இலக்கம் | விடை |
|---|---|---|---|
| 01. | 1 | 26. | 2 |
| 02. | 2 | 27. | 4 |
| 03. | 2 | 28. | 4 |
| 04. | 4 | 29. | 5 |
| 05. | 2 | 30. | 5 |
| 06. | 5 | 31. | 4 |
| 07. | 2 | 32. | 3 |
| 08. | 5 | 33. | 3 |
| 09. | 5 | 34. | 4 |
| 10. | 1 | 35. | 3 |
| 11. | 3 | 36. | 2 |
| 12. | 5 | 37. | 4 |
| 13. | 4 | 38. | 2 |
| 14. | 1 | 39. | 5 |
| 15. | 1 | 40. | 3 |
| 16. | 3 | 41. | 1 |
| 17. | 2 | 42. | 1 |
| 18. | 5 | 43. | 2 |
| 19. | 4 | 44. | 1 |
| 20. | 3 | 45. | 5 |
| 21. | 5 | 46. | 2 |
| 22. | 4 | 47. | 2 |
| 23. | 2 | 48. | 1 |
| 24. | 5 | 49. | 2 |
| 25. | 4 | 50. | 3 |

சரியான ஒரு விடைக்கு **02** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் ஆகும்.

PAPERMASTER.LK

## 2.2. வினாப்பத்திரம் II உம் விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்

### 2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு

நேரம் 03 மணித்தியாலங்கள்.

இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

உப பிரிவு ‘அ’ - கட்டமைப்பு வினாக்கள் 05.

உப பிரிவு ‘ஆ’ - கட்டமைப்பு வினாக்கள் 05.

குறைந்தது ஒரு பகுதியிலிருந்து 02 வினாக்களையேனும் தெரிவு செய்து 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள்.

இறுதிப் புள்ளிக் கணிப்பிடல்

வினாப்பத்திரம் I இற்கான புள்ளிகள் = 100

வினாப்பத்திரம் II இற்கான புள்ளிகள் = 100

இறுதிப்புள்ளிகள் $200 \div 2 = 100$

PAPERMASTER.LK

## 2.2.2. வினாப்பத்திரம் II இற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்

★ வினாப்பத்திரம் II இற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகள் 2, 3, 4.1, 4.2 ஆகிய வரைபுகளின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளன.

**பகுதி 'அ'**

**இப்பகுதியிலிருந்து குறைந்தது இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க.**

**வினா இலக்கம் 1**

**1.** (i) உதாரணங்களைப் பயன்படுத்தி ஓர் இலவசப் பொருளுக்கும் ஒரு பொருளாதாரப் பொருளுக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) அமையச் செலவு எண்ணக்கருவை விளக்கி, அருமைப் பிரச்சினையுடன் அமையச் செலவு எவ்வாறு தொடர்புபடுகின்றதென்பதை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) நிகழ்கால நுகர்வை குறைத்துக்கொள்ளத் தயாராயுள்ள நாடுகளின் பொருளாதாரங்கள், துரித வளர்ச்சியை எவ்வாறு அடைய முடியுமென்பதை உற்பத்தி இயல்தகவு வளையிகளைப் பயன்படுத்தி விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) ஓர் உற்பத்தி இயல்தகவு எல்லையின் மீதுள்ள சகல புள்ளிகளும் பொருளாதார வினைத்திறன் தொடர்பில் சமனானவையா? உமது விடையினை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) சந்தைப் பொருளாதாரங்கள் கட்டாயம் முதலாளித்துவப் பொருளாதாரங்களாகவும், கட்டளைப் பொருளாதாரங்கள் கட்டாயம் சோஷலிசப் பொருளாதாரங்களாகவும் இருக்குமா? உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

### எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

**1.** (i) **பொருளாதாரமல்லா பொருள் :**

- பூச்சிய விலையில் எல்லையற்ற நிரம்பலைக் கொண்டுள்ள பொருள் பொருளாதாரமல்லாப் பொருளாகும் (01 புள்ளி)

**(மாற்றீடான விடை)**

- உற்பத்தியின் போது பொருளாதார வளங்களைப் பயன்படுத்தாத அதாவது அமையச் செலவற்ற வகையில் எல்லையற்ற நிரம்பலைக் கொண்டுள்ள பொருள் பொருளாதாரமல்லாப் பொருளாகும் உதாரணம் :- சூரிய ஒளி, காற்று (01 புள்ளி)
- பொருளாதாரப் பொருள்
- நிரம்பலில் அருமைத்தன்மையைக் கொண்டுள்ள பொருள் பொருளாதாரப் பொருளாகும் (01 புள்ளி)

**(மாற்றீடான விடை)**

- உற்பத்தியின் போது பொருளாதார வளங்களைப் பயன்படுத்தும் பொருள் பொருளாதாரப் பொருளாகும் எனவே அவற்றுக்கு அமையச் செலவு உண்டு.
- உதாரணம் :- உணவு, உடை, மோட்டார், வாகனங்கள் வீட்டு உபகரணங்கள் (01 புள்ளி)

(ii)
- உற்பத்தி மற்றும் நுகர்வுத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது விட்டுக் கொடுப்புகளை மேற்கொள்ள வேண்டியது கட்டாயமாகும், இவ்வாறு விட்டுக் கொடுக்கப்படும் மிகச் சிறந்த மாற்றுத் தெரிவின் பெறுமதியே அமையச் செலவாகும். (01 புள்ளி)
- அமையச் செலவு தனிநபர்களுடன் தொடர்புபட்டதாகும். இதனால் தான் விட்டுக் கொடுக்கும் மிகச் சிறந்த மாற்றுத் தெரிவின் பெறுமதியினை அத் தெரிவினை மேற்கொள்ளும் நபர் மாத்திரமே மதிப்பிடமுடியும். (01 புள்ளி)
- அமையச் செலவானது அருமைப் பிரச்சினையுடன் தொடர்புபட்டதாகும் வளங்கள் அருமைத்தன்மை வாய்ந்தனவாயும் மாற்றுப் பயன்பாடு உடையனவாகவும் இருப்பதனாலேயே அமையச் செலவு ஏற்படுகிறது. அருமைத்தன்மை என்பது அளவற்ற மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்ய சமூகத்திடமுள்ள வளத்திரட்சி போதியதாக இல்லாமையைக் குறிக்கும். எல்லா மனித விருப்பங்களையும் வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு பூர்த்தி செய்ய முடியாத நிலையில் மாற்றுத் தெரிவுகள் மத்தியில் இருந்து தெரிவு செய்ய வேண்டியுள்ளது. (01 புள்ளி)

PAPERMASTER.LK

- இவ்வாறு தெரிவினை மேற்கொள்ளும் போது கட்டாயம் விட்டுக் கொடுப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். அருமைப் பிரச்சினை காணப்படும் நிலையில் உற்பத்தி மற்றும் நுகர்வுத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது ஏனைய வாய்ப்புகளை இழக்க நேரிடும். தெரிவை மேற்கொள்ளும் போது விட்டுக் கொடுக்கப்படும் மிகச் சிறந்த மாற்றுத் தெரிவின் பெறுமதியே அமையச் செலவாகும். அருமைத்தன்மை இல்லையெனின் அமையச்செலவும் இல்லை. (01 புள்ளி)

(iii) - பொருளாதாரமொன்று நிகழ்கால மூலதனவாக்கத்தின் பொருட்டு விட்டுக் கொடுக்கும் நிகழ்கால நுகர்வின் அளவிலேயே பெரும்பாலும் அப் பொருளாதாரத்தின் எதிர்கால வளர்ச்சியின் வேகம் தீர்மானிக்கப்படும்

- நிகழ்காலத்தில் பொருளாதாரத்தின் வளங்களின் பெரும்பகுதி சார்பளவில் மூலதனப்பொருள்களின் உற்பத்தியில் பயன்படுத்தப் படுமாயின், பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவு விரிவாக்கமடைந்து எதிர்கால சாத்திய வெளியீடு கணிசமானளவு கூடிய வளர்ச்சிவீதத்தை அடைய முடியும். அப் பொருளாதாரத்தின் எதிர்கால உற்பத்தி இயல்தகவு வளையியானது நிகழ்கால உற்பத்தி இயல்தகவு வளையியிலிருந்து வலப்புறமாக மிகப் பெரியளவு தூரத்திற்கு இடம் பெயரும்

- மறுபுறம் நிகழ்காலத்தில் நுகர்வுக்காக வளங்களை அதிகளவு பயன்படுத்துவார்களாயின் அப்பொருளாதாரத்தின் எதிர்கால உற்பத்தி இயல்தகவு வளர்ச்சிவீதம் மிகவும் வரையறுக்கப்பட்டதாக இருக்கும். எதிர்கால உற்பத்தி இயல்தகவு வளையியானது வலப்புறமாக இடம் பெயர்ந்தாலும் மிகச் சிறிய தூரத்திற்கே இடம்பெயரும்.




(அ) நிகழ்காலத்தில்நுகர்வுக்ககாக சார்பளவில் குறைந்தளவு வளங்களை ஒதுக்கீடு செய்யும் பொருளாதாரம்.




(ஆ) நிகழ்காலத்தில்நுகர்வுக்ககாக சார்பளவில் அதிகளவு வளங்களை ஒதுக்கீடு செய்யும் பொருளாதாரம்.

**மாற்றீடான வரைபடம்**




PAPERMASTER.LK

(சரியான விளக்கத்திற்கு 02 புள்ளிகள் சரியான வரைபடத்திற்கு / வரைபடங்களுக்கு 02 புள்ளிகள்)

(iv) - பொருளாதார வினைத்திறன் என்பதனாற் கருதப்படுவது யாதெனில் பொருளாதாரத்தின் வசமுள்ள வளங்கள் அச்சமூகத்தின் மிக விருப்புக்குரிய பொருள்கள் சேவைகளை உற்பத்தி செய்வதில் வினைத்திறனுடன் பயன்படுத்தப்படும் நிலையினையாகும்.

- பொருளாதார வினைத்திறன் ஏற்பட வேண்டுமாயின் இருவகையான வினைத்திறன்களை ஏக காலத்தில் எய்த வேண்டும் - உற்பத்தி வினைத்திறன், ஒதுக்கீட்டு வினைத்திறன் என்பனவே அவையாகும்

- உற்பத்தி இயல்தகவு வளையின் மீதுள்ள சகல புள்ளிகளும் உற்பத்தி வினைத்திறனைக் (தொழினுட்ப ரீதியில்) கொண்டிருக்கின்ற போதிலும் (அதாவது ஒரு பொருளின் மேலதிக அலகினை உற்பத்தி செய்வது மற்றைய பொருளின் உற்பத்தியைக் குறைக்காமல் சாத்தியமாகாது) பொருளாதார வினைத்திறனுக்கு உற்பத்தி வினைத்திறன் மட்டுமன்றி ஒதுக்கீட்டு வினைத்திறனும் அவசியம். வள ஒதுக்கீட்டு வினைத்திறனை உற்பத்தி இயல்தகவு வளையியின் மீதுள்ள புள்ளிகள் மத்தியில் ஒரு குறிப்பிட்ட சிறப்புப் புள்ளி மாத்திரமே கொண்டிருக்கும். அப்புள்ளி சமூகத்தின் விருப்பத்தெரிவினை சிறப்பாக வெளிப்படுத்தும்.

- ஒதுக்கீட்டு வினைத்திறன் வாய்ந்த அக் குறிப்பிட்ட சிறப்புப் புள்ளி எது என்பதைத் தீர்மானிப்பதில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் சேவைகள் பற்றி சமூகம் கொண்டுள்ள விருப்பத்தேர்வுகள் மற்றும் அப்பொருள்கள் சேவைகள் பற்றிய மதிப்பீடுகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. வள ஒதுக்கீட்டு வினைத்திறனை பிரதிபலிக்கும் பொருள் சேர்க்கையைத் தெரிவு செய்யும் போது குறிப்பிட்ட பொருள் சேர்க்கையின் எல்லை நன்மைகளை (Marginal benefit) அவற்றின் எல்லைச் செலவுகளோடு (marginal cost) ஒப்பிட்டு அவை ஒன்றுக்கொன்று சமப்படும் பொருள் சேர்க்கையின் அடிப்படையிலேயே தெரிவு செய்ய வேண்டும். எனவே பொருளாதார வினைத்திறனை தீர்மானிப்பதற்காக உற்பத்தி இயல்தகவு வளையியில் காட்டப்படும் எல்லைச் செலவு தொடர்பான தகவல்களுக்கு மேலதிகமாக சமூகத்தின் விருப்பத் தேர்வுகளின் அடிப்படையிலான எல்லை நன்மைகள் பற்றிய தகவல்களையும் இணைத்து நோக்குவது அவசியமாகும். (04 புள்ளிகள்)

(v) - சந்தைப் பொருளாதாரமொன்று கட்டாயமாக முதலாளித்துவ பொருளாதாரமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அதேபோல கட்டளைப் பொருளாதாரமொன்று கட்டாயமாக சோசலிசப் பொருளாதாரமாக இருக்க வேண்டியதில்லை. பொருளாதார முறைமைகளை முதலாளித்துவமென்றும் சமவுடைமை (சோசலிச) பொருளாதாரமென்றும் வேறுபடுத்தும் போது உற்பத்தி வளங்களின் உரிமை எவரிடம் உள்ளது என்பதன் அடிப்படையிலேயே வேறுபடுத்தப்படுகிறது. எல்லா உற்பத்தி வளங்களும் தனியார் உரிமையாகக் காணப்படுமாயின் முதலாளித்துவ பொருளாதாரமென்றும் எல்லா உற்பத்தி வளங்களும் அரசுடைமையாகக் காணப்படுமாயின் சோசலிசப் பொருளாதார முறைமையென்றும் வகைப்படுத்தப்படும்.

- மறுபுறம் சந்தைப் பொருளாதார முறைமையென்றும் கட்டளைப் பொருளாதார முறைமையென்றும் வகைப்படுத்தப்படும்போது அது வள ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் பொறிமுறையின் அடிப்படையிலேயே வகைப்படுத்தப்படுகிறது.

- வள ஒதுக்கீட்டின் பொருட்டு பிரதானமாக விலைப் பொறிமுறையினைப் பயன்படுத்தும் பொருளாதார முறைமைகள் சந்தைப் பொருளாதார முறைமை எனவும் வள ஒதுக்கீட்டை மேற்கொள்ள மத்திய திட்டமிடல் முறையினைப் (கட்டளைகளை) பயன்படுத்தும் பொருளாதார முறைமைகள் கட்டளைப் பொருநாதார முறைமைகளென்றும் வகைப்படுத்தப்படும். இதனடிப்படையில் சந்தை முதலாளித்துவம் மற்றும் கட்டளைச் சோசலிசம் ஆகிய இருதுருவங்களான பொருளாதாரமுறைமைகளை அடையாளப்படுத்தலாம்.

- முதலாளித்துவ பொருளாதார முறைமைகளில் பல விலைப்பொறிமுறையினை அடிப்படையாகக் கொண்ட சந்தைப் பொருளாதாரங்களாகவும். சோசலிசப் பொருளாதார முறைமைகளில் பல மத்திய திட்டமிடல் பொறிமுறையினை அடிப்படையாகக் கொண்டதாயும் இயங்குவதைக் காணக்கூடியதாக இருப்பினும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவ்வாறு இருக்க வேண்டியதில்லை என்பதையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும். வளங்களின் உரிமை மற்றும் வள ஒதுக்கீட்டுப் பொறிமுறை ஆகிய இரு நிர்ணயிப்பான்களின் பல்வேறு சேர்க்கைகளைக் கொண்ட கலப்புப் பொருளாதார

PAPERMASTER.LK

முறைமைகளை நடைமுறையுலகில் நாம் பொதுவாகக் காணமுடியும். இதன்படி சோசலிச சந்தைப் பொருளாதாரங்களையும் முதலாளித்துவ கட்டளைப் பொருளாதாரங்களையும் காணமுடியும். தூய முதலாளித்துவப் பொருளாதார முறைமையையோ தூய கட்டளைப் பொருளாதார முறைமையினையோ உலகின் எந்த ஒரு நாட்டிலும் காணமுடியாது. (04 புள்ளிகள்)

PAPERMASTER.LK

**வினா இலக்கம் 2**

2. (i) சந்தை நிரம்பல் வளையியொன்றை வரையும்போது நிலையாக இருப்பதாக எடுகோள் கொள்ளப்படும் காரணிகள் எவை ? (04 புள்ளிகள்)

(ii) வருமான விளைவும் பதிலீட்டு விளைவும் 'கேள்வி விதியினை' எவ்வாறு விளக்குகின்றன என்பதை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) குறைந்தபட்ச விலையையும் உயர்ந்தபட்ச விலையையும் வேறுபடுத்தி, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக. (04 புள்ளிகள்)

(iv) நிரம்பல் நெகிழ்வற்றதாக இருக்குமாயின் உற்பத்தியாளர் மீது விதிக்கப்படும் சிறப்பு (அலகு) வரியின் சுமையின் பெரும் பகுதியினை யார் செலுத்துவார் ? பொருத்தமான வரைபொன்றைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) பின்வரும் சமன்பாடுகள் பொருளொன்றின் சந்தைக் கேள்வி, நிரம்பல் சார்புகளை விபரிக்கின்றன.

$Q_d = 100 - 4P$ (கேள்வி) $Q_s = -30 + 6P$ (நிரம்பல்)

(அ) சமன்பாடுகளைப் பயன்படுத்தி சந்தைச் சமநிலை விலையையும் சமநிலைத் தொகையையும் கணிப்பிட்டு, அதனை வரைபொன்றில் சரியாக வரைந்து காட்டுக. (02 புள்ளிகள்)

(ஆ) சந்தைச் சமநிலையின்போது உற்பத்தியாளர் மிகையையும் நுகர்வோர் மிகையையும் கணிப்பிட்டு, அதனை வரைபிற் காட்டுக. (02 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

2 (i)
- உள்ளீடுகளின் விலை ∴ உற்பத்தி செலவு
- தொடர்புடைய பொருள்களின் விலை
- தொழினுட்பம்
- எதிர்பார்க்கப்படும் எதிர்கால விலை
- அரச கொள்கைகள், வரிகளும் மானியங்களும்
- நிரம்பலாளர்களின் எண்ணிக்கை

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள் விலைதவிர்ந்த ஏனைய காரணிகள் எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் 01 புள்ளி மாத்திரம் வழங்குக)

PAPERMASTER.LK

(ii) ஏனையன மாறாநிலையில் பொருளின் விலைமாற்றம் காரணமாக மெய்வருமானத்தில் ஏற்படும் மாற்றத்தினால் கேள்வித் தொகை மாற்றமடையும் தன்மையே வருமான விளைவு எனக்குறிப்பிடப்படும். ஏனையன மாறா நிலையில் குறித்த பொருளின் விலை அதிகரிக்குமாயின் நுகர்வோனின் மெய்வருமானம் வீழ்ச்சியடைவதனால் கருதப்படும் பொருள் ஒரு சாதாரண பொருளாயின் அப்பொருளின் கேள்வித் தொகை வீழ்ச்சியடையும் மறுபுறம் ஏனையன மாறா நிலையில் குறித்த பொருளின் விலை வீழ்ச்சியடையுமாயின் மெய்வருமான அதிகரிப்பு ஏற்படுவதனால், கருதப்படும் பொருள் சாதாரண பொருளாயின் அப்பொருளின் கேள்வித் தொகை அதிகரிக்கும். வருமான விளைவானது கேள்வி விதியினை உறுதிப்படுத்துகிறது.

(02 புள்ளிகள்)

- பதிலீட்டு விளைவென்பது ஏனையன மாறா நிலையில் சார்பு விலை மாற்றம் காரணமாக கேள்வித்தொகையில் ஏற்படும் மாற்றத்தைக் கருதும். கேள்வியைத் தீர்மானிக்கும் ஏனைய காரணிகள் மாறா நிலையில் குறித்த பொருளின் விலை அதிகரிக்குமாயின் சார்புவிலை உயரும். இதனால் சார்பளவில் விலை கூடிய பொருளின் கேள்வியை குறைத்து சார்பளவில் விலை குறைந்த பொருள் மீதான கேள்வி அதிகரிக்கும். மறுபுறம் ஏனையன மாறா நிலையில் கருதப்படும் பொருளின் விலை வீழ்ச்சியடையுமாயின் சார்பளவில் குறித்த பொருள் மலிவானதாக மாறும். இதனால் சார்பளவில் விலை குறைந்த பொருள் அதிகளவில் கொள்வனவு செய்யப்படும். எனவே பதிலீட்டு விளைவும் கேள்வி விதியினால் காட்டப்படும் விலைக்கும் கேள்வித் தொகைக்கும் இடையிலான எதிர்கணியத் தொடர்பினை உறுதிப்படுத்துகிறது.

(02 புள்ளிகள்)

(iii) குறிப்பிட்ட பொருள்கள் சேவைகளுக்கு சந்தையில் நிலவும் விலை உற்பத்தியாளருக்கும் நிரம்பலாளருக்கும் சாதகமற்றதாகவும், நியாயமற்றதாகவும் இருப்பதாக கருதப்படும் சந்தர்ப்பங்களில். அவர்களுக்கு உதவும் விதத்தில் அரசாங்கம் குறைந்தபட்ச விலையொன்றை சட்டரீதியாக நிர்ணயித்தல் குறைந்தபட்ச விலை எனப்படும். (01 புள்ளி)

உதாரணம்: குறைந்தபட்ச சம்பள நிர்ணயம், விவசாயப் பொருள்களுக்கு உத்தரவாத விலை நிர்ணயம்.

(01 புள்ளி)

- குறிப்பிட்ட சில பொருள்கள் சேவைகளுக்கு சந்தைகளில் நிலவும் விலை கொள்வனவாளர்களுக்கு சாதகமற்றதாகவும் நியாயமற்றதாயும் இருப்பதாகக் கருதப்படும் பட்சத்தில் அரசாங்கத்தினால் உயர்ந்தபட்ச விலையொன்று சட்டரீதியாக நிர்ணயம் செய்யப்படும். (01 புள்ளி)

உதாரணம் :-

அத்தியாவசிய உணவு.்.நுகர்வு பொருள்களுக்கு உச்ச விலை விதித்தல் (அரிசி, சீனி, பாண், பால்மா, மற்றும் எரிவாயு) பயணிகள் போக்கு வரத்துக் கட்டண நிர்ணயம், உயர்ந்தபட்ச வீட்டு வாடகை நிர்ணயம், உயர்ந்தபட்ச வட்டி வீத நிர்ணயம். (01 புள்ளி)

(iv) சந்தையின் இருபக்கங்களாகிய கேள்வி மற்றும் நிரம்பல் என்பவற்றில் எது நெகிழ்வற்றுக் காணப்படுகிறதோ அது வரிச்சுமையின் பெரும்பங்கினைத்தாங்கும் என்பது விதியாகும். இங்கு நிரம்பல் நெகிழ்வற்ற பொருளொன்றின் மீது சிறப்பு (அலகு) வரியொன்று விதிக்கப்படும் போது வரிச்சமையின் பெரும்பங்கினை நிரம்பலாளரே தாங்குவர். கொள்வனவாளர் வரிச்சுமையின் சிறிய அளவினை மட்டுமே தாங்குவர்.

(02 புள்ளிகள்)

PAPERMASTER.LK




(02 புள்ளிகள்)

(v) (அ)

| | | |
|---|---|---|
| Qd | = | QS |
| 100 - 4 P | = | -30 + 6P |
| 100 + 30 | = | 4P+6P |
| 130 | = | 10P |
| 13 | = | P |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Qd | = | 100 - 4P | Qs | = | -30 - 6P |
| | = | 100 - 4(13) | | = | -30 + 6 (13) |
| | = | 100 - 52 | | = | -30 + 78 |
| | = | 48 | | = | 48 |

(02 புள்ளிகள்)

சமநிலை வரைபடத்தைக் காட்டல்.




PAPERMASTER.LK

(02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தியாளன் மிகை $= \frac{(\text{சமநிலை விலை - குறைந்தபட்ச நிரம்பல் விலை})}{2} \times$ சமநிலைத் தொகை

$= \frac{(13 - 5) \times 48}{2} \quad = \quad \frac{384}{2} \quad = \quad \underline{\underline{192}}$

நுகர்வோர் மிகை $= \frac{(\text{உயர்ந்தபட்ச கேள்வி விலை - சமநிலை விலை})}{2} \times$ சமநிலைத்தொகை

$= \frac{(25 - 12) \times 48}{2} \quad = \frac{576}{2} \quad = \underline{\underline{288}}$

(உற்பத்தியாளர் மிகையையும் நுகர்வோர் மிகையையும் வரைபடத்தில் சரியாக காட்டுவதற்கு 01 புள்ளி, கணிப்பீடு செய்வதற்கு 01 புள்ளி)

PAPERMASTER.LK

**வினா இலக்கம் 3**

**3.** (i) ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தந்து வெளிப்படையான (நேர்) செலவுகளையும் உட்கிடையான (நேரில்) செலவுகளையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) பொருளியலாளர்கள் சாதாரண இலாபத்தை ஒரு செலவாகக் கருதுவதேன் ? (04 புள்ளிகள்)

(iii) **நால்வகைச்** சந்தை அமைப்புகளையும் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iv) இலாப உச்சப்படுத்தலுக்கான நிபந்தனை என்ன ? விலையை ஏற்கும் ஓர் உற்பத்தி நிறுவனம் தொடர்பில் இந்நிபந்தனை எவ்வாறு அமையும் ? (04 புள்ளிகள்)

(v) தரப்பட்ட குறுகிய காலமொன்றில் விலையை ஏற்கும் உற்பத்தி நிறுவனமொன்று 20 அலகுகளை உற்பத்தி செய்வதாகக் கருதுக. அதன் வெளியீட்டலகொன்றின் சந்தை விலை ரூபா 50 ஆகும். 20 அலகு வெளியீட்டில் சராசரி மொத்தச் செலவு ரூபா 60 ஆகவும் சராசரி மாறுஞ்செலவு ரூபா 40 ஆகவும் உள்ளன.

(அ) இந்த குறுகிய காலப்பகுதியில் நிறுவனம் அடையும் இலாபத்தின் அல்லது நட்டத்தின் அளவு யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) இந்நிறுவனத்தின் மொத்த நிலையான செலவு எவ்வளவு ? (02 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

(3) (i) - உற்பத்திச் செயன்முறைக்காக நிறுவனம் வெளியிலிருந்து கொள்வனவு செய்யும் உள்ளீடுகள் மீது மேற்கொள்ளப்படும் செலவுகளின் பணரீதியான பெறுமதி நேர் செலவாகும். (01 புள்ளி)

ஜமாற்றீடான விடை :- நேர் செலவென்பது நிறுவனம் வெளியிலிருந்து கொள்வனவு செயயும் உற்பத்தி வளங்களின் அமையச் செலவாகும்ஸ

உதாரணம் : வெளியிலிருந்து பெற்ற உழைப்பின் பொருட்டு மேற்கொள்ளப்படும் சம்பளக் கொடுப்பனவுகள், வெளியிலிருந்து பெற்ற மூலப் பொருள்கள், மின்சாரம், நீர் எரிபொருள் போன்ற உள்ளீடுகளுக்கான கொடுப்பனவுகள்

- உற்பத்தியில் பயன்படுத்தப்படும் நிறுவனத்திற்குச் சொந்தமான உற்பத்தி வளங்களின் அமையச் செலவே உட்கிடையான (நேரில்) செலவாகும். அவற்றுக்கு பணக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் படுவதில்லை. நிறுவனத்திற்கு சொந்தமான வளங்களின் சிறந்த மாற்றுப்பயன்பாட்டின் ஏற்றப்பட்ட பெறுமதியை (ஹிரவநன எயடரந) உட்கிடையான செலவுகள் பிரதிபலிக்கும். (01 புள்ளி)

உதாரணம் :

- நிறுவனமொன்று தனது சொந்த நிதியினை நிறுவனத்தின் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துமாயின் அந் நிதியினை அடுத்த சிறந்த மாற்றுத் தெரிவில் ஈடுபடுத்தி உழைக்கப்படக்கூடிய வட்டி வருவாயை இழத்தல் இங்கு உட்கிடையான செலவாகும்
- நிறுவனம் தன்னிடமுள்ள, நிலம், கட்டடம் போன்றவற்றை உற்பத்தியில் ஈடுபடுத்தும் போது இழக்கும் வாடகை வருமானங்கள் மற்றொரு உதாரணமாகும்.
- நிறுவன உரிமையாளன் முயற்சியில் ஈடுபடுவதன் காரணமாக இழந்த சம்பளங்கள் (01 புள்ளி)

(ii) - சாதாரண இலாபம்: முயற்சியாளரொருவர் நடைமுறையிலுள்ள உற்பத்தி செயன்முறையில் தொடர்ந்து ஈடுபடும் பொருட்டு எதிர்பார்க்கும் குறைந்த பட்சக் கொடுப்பனவு சாதாரண இலாபம் எனப்படுகிறது. (02 புள்ளிள்)

- முயற்சியளரொருவர் முயற்சியாண்மைத் திறன்களை வழங்குகிறார். மூலதனம் உள்ளடங்கலான ஏனைய உற்பத்திக் காரணிகளைப் பொருத்தமாக ஒருங்கிணைந்து வணிகம் தொடர்பான தீர்மானங்களை எடுத்து வணிக இடர்களை எதிர்கொண்டு புத்தாக்கத்தில் ஈடுபட்டு உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வார். இவ்வாறு உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடும் போது அதன் பொருட்டு அவரது முயற்சிக்குப் பொருத்தமான குறைந்தபட்சக் கொடுப்பனவொன்றை எதிர்பார்ப்பார். நடைமுறையிலுள்ள உற்பத்திச் செயன் முறையினுள் அக்குறைந்த பட்சக் கொடுப்பானவையேனும் அவரால் பெற்றுக்கொள்ள முடியவில்லையெனின் குறித்த தொழில் முயற்சியிலிருந்து தமது முயற்சியாண்மையை விலகிக் கொள்வார்
- எனவே முயற்சியாண்மைப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய சாதாரண கொடுப்பனவாகையால் சாதாரண இலாபம் ஒரு உட்கிடையான (நேரில்) செலவாகும். (02 புள்ளிகள்)

PAPERMASTER.LK

(iii) - நிறைபோட்டி தூயபோட்டி
- தனியுரிமைப் போட்டி
- சிலருமை
- தனியுரிமை (ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)

(iv) - இலாபம் என்பதனாற் கருதப்படுவது யாதெனில் நிறுவனமொன்றின் மொத்த வருவாய் (TR) அதன் மொத்த செலவை (TC) விஞ்சியதாகக் காணப்படும் அளவினையாகும். எதேனும் ஒரு வெளியீட்டு மட்டத்தில் எல்லை வருவாய் (MR) எல்லைச் செலவுக்கு (MC) சமப்படுமாயின் அவ் வெளியீட்டு மட்டமானது இலாபத்தை உச்சப்படுத்தும் வெளியீட்டு மட்டமாகக் கருதப்படும். எனவே இலாப உச்சப்படுத்தல் விதியாகக் கருதப்படுவது MC = MR என்னும் நிபந்தனையாகும்
வெளியீடானது அக்குறிப்பிட்ட புள்ளியை அடையும் போது பெறப்படும் இலாபத்தில் மேலதிக அதிகரிப்போ அல்லது வீழ்ச்சியோ ஏற்படாது (02 புள்ளிகள்)

- விலை ஏற்போனாக செயற்படும் உற்பத்தி நிறுவனமொன்றின் எல்லை வருவாய் (MR) அதன் விலைக்கு (P) சமப்படுவதனால் அவ்வாறானதொரு நிறுவனத்தின் இலாப உச்சப்படுத்தல் நிபந்தனை P = MC எனக் மீளக்குறிப்பிடப்படலாம் அதாவது விலையை ஏற்கும் ஒரு நிறுவனம் தனது இலாபத்தை உச்சப்படுத்த அல்லது நட்டத்தை இழிவுபடுத்த P=MC ஆகும் புள்ளியில் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும். இந்நிபந்தனையானது விலை ஏற்போனாகத் தொழிற்படும் நிறுவனத்துக்கு மட்டுமே ஏற்புடைய ஒரு நிபந்தனையாகும் (03 புள்ளிகள்)

(v) (அ) நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டம்

இலாபம் அல்லது நட்டம் = மொத்த வருவாய் (P x Q) - மொத்த செலவு (ATC x Q)
= (50x 20) – (60x 20)
= 1000 – 1>200
நட்டம் = 200 ரூபா (02 புள்ளிகள்)

(ஆ) மொத்த நிலையான செலவு = சராசரி நிலையான செலவு (AFC) x வெளியீடு (Q)

சராசரி நிலையான செலவு = சராசரி மொத்த செலவு (ATC) - சராசரி மாறுஞ் செலவு (AVC)
= 60 – 40 = 20

மொத்த நிலையான செலவு (TFC) = சராசரி நிலையான செலவு x வெளியீடு
= 20 x 20
= 400 ரூபா

(02 புள்ளிகள்)

[மாற்றீடான விடை :-

மொத்த செலவு (TC) = சராசரி மொத்த செலவு (ATC) x வெளியீடு (Q)
= 60 x 20 = 1200

மொத்த மாறும் செலவு (வுஏஊ) = சராசரி மாறுஞ் செலவு (AVC) x வெளியீடு (Q)
= 40 x 20 = 800

மொத்த நிலையான செலவு (வுகுஊ) = TC - TVC
= 1200 - 800
= 400 ரூபா

PAPERMASTER.LK

**வினா இலக்கம் 4**

**4.** (i) ஒரு நாட்டின் கூட்டு மொத்தப் பொருளாதார நடவடிக்கைகளை அளவிடப் பயன்படும் **மூன்று** அணுகுமுறைகளும் எவை ? அவை மொத்தப் பொருளாதார செயன்முறை தொடர்பில் ஒரே பெறுமதியினைத் தருவதேன் ? (04 புள்ளிகள்)

(ii) இலங்கையின் தேசிய சேமிப்பின் பிரதான மூலாதாரங்கள் எவை ? (04 புள்ளிகள்)

(iii) தேசிய வருமானப் புள்ளிவிபரங்கள் எவ்வழிகளில் பயன்படுகின்றன ? (04 புள்ளிகள்)

(iv) கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுவதாகக் கொள்க. (சகல புள்ளிவிபரங்களும் ரூபா மில்லியன்களில்)

| வகை | பெறுமதி | வகை | பெறுமதி |
|---|---|---|---|
| மொத்த தனியார் உள்நாட்டு முதலீடு | 70 | அரசாங்கத்திலிருந்தான வீட்டுத்துறைக்கான மாற்றல்கள் | 25 |
| அரசாங்கக் கொள்வனவுகள் | 50 | அரசாங்கம் வீட்டுத்துறையினருக்கு வழங்கும் வட்டிச் செலுத்தல்கள் | 15 |
| சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 400 | வெளிநாட்டிலிருந்தான காரணி வருவாய்கள் | 7 |
| சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு மீதி | -25 | வெளிநாட்டிற்குச் செலுத்தப்படும் காரணி வருவாய் செலுத்தல்கள் | 12 |
| வரிகள் | 100 | தேறிய வெளிநாட்டு நடைமுறை மாற்றல்கள் | 10 |

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) தேறிய ஏற்றுமதிகள் (02 புள்ளிகள்)

(ஆ) தனியார் நுகர்வுச் செலவீடு (02 புள்ளிகள்)

(இ) செலவிடத்தக்க மொத்தத் தேசிய வருமானம் (02 புள்ளிகள்)

(ஈ) அரச சேமிப்புகள் (02 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

04. (i) - வெளியீட்டு (உற்பத்தி) அணுகுமுறை
- வருமான அணுகுமுறை
- செலவீட்டு அணுகுமுறை

(மூன்று அணுகுமுறைகளும் குறிப்படப்பட்டிருப்பின் 02 புள்ளிகள் இரண்டு அணுகுமுறைகள் குறிப்பிடப்பட்டிருப்பின் 01 புள்ளி)

- உற்பத்தி, வருமானம் மற்றும் செலவீட்டு அணுகுமுறைகள் மூலம் வெளிப்படுத்தப்படுவது ஒரே பரிமாற்றச் செயன்முறையின் மூன்று பக்கங்களாகும். உற்பத்திச் செயன்முறையின் மூலம் தரப்பட்ட ஆண்டொன்றில் நாட்டினுள் உற்பத்தி செய்யப்பட்ட எல்லா முடிவுப் பொருள்கள் சேவைகளின் பெறுமதி கணிப்பிடப்படுகிறது, வருமான அணுகுமுறையின் மூலம் முடிவுப் பொருள் உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்த உற்பத்திக் காரணிகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகையாகிய மொத்த வருமானத்தின் பெறுமதியே கணிப்பிடப்படுகிறது. உற்பத்தியின் பெறுமதியானது அவ்வுற்பத்தியை மேற்கொள்ளப் பங்களித்த காரணிகளின் பெறுமதிக்கு சமமாக வேண்டுமாகையால் வருமானத்தின் பெறுமதி உற்பத்திப் பெறுமதிக்கு சமமாக இருக்கும். அதேபோல் செலவீட்டு அணுகுமுறையின் மூலம் கணிப்பிடப்படுவது யாதெனில் முடிவுப் பொருள்கள் சேவைகளின் அளவை கொள்வனவு செய்ய மேற்கொள்ளப்பட வேண்டிய மொத்த செலவுகளின் பெறுமதியாகும். உற்பத்தியின் பெறுமதியானது அவ்வுற்பத்தியைக் கொள்வனவு செய்யத் தேவையான பணப்பெறுமதிக்கு சமமாக இருக்க வேண்டும். இதனால் உற்பத்திப் பெறுமதியும் செலவீட்டுப் பெறுமதியும் ஒன்றுக்கொன்று சமமாகும். இதன் அடிப்படையில் நோக்குமிடத்து உற்பத்தி, வருமானம், செலவீடு ஆகிய அணுகுமுறைகள் மூலம் பெறப்படுவது மொத்த உற்பத்திச் செயன்முறையின் ஒரே பெறுமதியாகும் (02 புள்ளிகள்)

PAPERMASTER.LK

(ii) - உள்நாட்டு சேமிப்பு
- தனியார் சேமிப்பு (வீட்டுத்துறை, மற்றும் நிறுவனங்கள்)
- அரசாங்க சேமிப்பு

- வெளிநாட்டு சேமிப்பு
- வெளிநாட்டு தேறிய காரணி வருவாய்
- வெளிநாட்டு தேறிய தனியார் மாற்றல்கள் (03 புள்ளிகள்)

(உள்நாட்டு சேமிப்புகள் மற்றும் வெளிநாட்டு சேமிப்புக்கள் எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் 02 புள்ளிகள் மாத்திரம்)

(iii) - பொருளாதார செயலாற்றத்தை மதிப்பிடல்
- பொருளாதார வளர்ச்சியை அளவிடல்
- தலைக்குரிய வருவாய் மட்டங்களை சர்வதேச அடிப்படையில் ஒப்பிடல்
- பொருளாதாரத்தின் கட்டமைப்பு சார் பண்புகளை ஆய்வு செய்தல்.
- மக்களின் வாழ்க்கைத்தரம் நலன் என்பவற்றை மதிப்பீடு செய்தல்
- வருமானத்தின் வினைத்திறனான பங்கீட்டை (சம்பளங்கள், வட்டி, வாடகை மற்றும் இலாபம்) இனங்காணல்.
- பேரினப் பொருளாதாரத்தின் தொழிற்பாட்டு ரீதியான தொடர்புகளை இனங்காணல்
- பொருளாதார மற்றும் சமூக கொள்கை உருவாக்கம் மற்றும் திட்டமிடல்
- பொருளாதாரத்தின் மொத்த வளங்களின் அளவு மற்றும் அவற்றின் பயன்பாடு என்பவற்றை இனங்காணல்.
- பேரினப் பொருளாதார மாறிகளின் நடத்தையினை ஆய்வு செய்து எதிர்வு கூறல்களை மேற்கொள்ளல்.

(ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(iv) (அ) தேறிய ஏற்றுமதிகள் :

சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குமீதி = தேறிய ஏற்றுமதிகள் + வெளிநாட்டுத் தேறிய காரணிவருவாய் + தேறிய வெளிநாட்டு மாற்றல்கள்

தேறிய ஏற்றுமதிகள் = நடைமுறைக் கணக்கு மீதி – (வெளிநாட்டு தேறிய காரணிவருவாய் + தேறிய வெளிநாட்டு மாற்றல்கள்)

(01 புள்ளி)

$= -25 - [(7 - 12) + 10]$

$= -25 - [-5 + 10]$

$= -25 - 5$

$= -30$ மில்லியன் ரூபா (01 புள்ளி)

(M) தனியார் நுகர்வுச் செலவினம் :

$C = Y - [C + I + G + NX]$

(01 புள்ளி)

$= 400 - [70 + 50 + (-30)]$

$= 400 - [120 - 30]$

$= 400 - 90$

$C = 310$ மில்லியன் ரூபா (01 புள்ளி)

PAPERMASTER.LK

(அ) தேறிய ஏற்றுமதிகள் :

சென்மதி நிலுவையின் = தேறிய ஏற்றுமதிகள் + வெளிநாட்டுத் தேறிய நடைமுறைக் கணக்குமீதி காரணிவருவாய் + தேறிய வெளிநாட்டு மாற்றல்கள்

தேறிய ஏற்றுமதிகள் = நடைமுறைக் கணக்கு மீதி – (வெளிநாட்டு தேறிய காரணிவருவாய் + தேறிய வெளிநாட்டு மாற்றல்கள்)

(01 புள்ளி)

= - 25 – [(7 -12) +10]

= -25 – [-5 + 10]

= - 25 - 5

= - 30 மில்லியன் ரூபா

(01 புள்ளி)

(ஆ) தனியார் நுகர்வுச் செலவினம் :

C = Y - [C + I + G + NX]

(01 புள்ளி)

= 400 - [ 70 + 50+ (-30) ]

= 400 – [120 – 30]

= 400 – 90

C = 310 மில்லியன் ரூபா

(01 புள்ளி)

(இ) செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம்

= மொத்த உள்நாட்டு உற்பத்திதேறிய வெளிநாட்டு காரணிவருவாய் + தேறிய வெளிநாட்டு நடைமுறை மாற்றல்கள்

(01 புள்ளி)

= 400 + (-5) + 10

= 405 மில்லியன் ரூபா

(01 புள்ளி)

(ஈ) அரசாங்க சேமிப்பு (SG)

= அரசாங்கத்தின் தேறிய வரிவருவாய் - அரசாங்கக் கொள்வனவுகள்

(01 புள்ளி)

SG = (T-Tr-1NT) - G

= (100 – 25 -15) - 50

= 60 – 50

SG = 10 மில்லியன் (01 புள்ளி)

PAPERMASTER.LK

**வினா இலக்கம் 5**

**5.** (i) பின்வரும் மொத்த நுகர்வுச் சார்பினைக் கருத்திற் கொள்க.

$$C = a + bY_d$$

இச்சமன்பாட்டில் C என்பது மொத்த நுகர்வுச் செலவீட்டையும் $Y_d$ என்பது செலவிடத்தக்க தேசிய வருமான மட்டத்தையும் குறிக்கும். **a** மற்றும் **b** ஆகிய குணகங்கள் பற்றி நீர் எவ்வாறு கருத்துரைப்பீரென விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) சமநிலைத் தேசிய வருமான மட்டம் என்பதனாற் கருதப்படுவதென்ன ? திறந்த பொருளாதாரமொன்றின் தேசிய வருமானச் சமநிலை மட்டத்தை அடையத் தேவையான நிபந்தனைகள் யாவை ? (04 புள்ளிகள்)

(iii) மூடிய பொருளாதாரமொன்றில் திட்டமிட்ட சேமிப்புகள் திட்டமிட்ட முதலீட்டை விஞ்சியுள்ளதாகக் கருதுக. இவ்வாறான நிலைமையில் இப்பொருளாதாரம் எவ்வாறு சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை அடையுமென விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) மூடிய பொருளாதாரமொன்றின் பின்வரும் பேரினப் பொருளாதாரத் தரவுகள் தரப்பட்டுள்ளன. (சகல தரவுகளும் ரூபா மில்லியன்களில்)

| | | |
|---|---|---|
| நுகர்வு (C) | = | 50 + 0.8 Yd |
| முதலீடு (I) | = | 120 |
| அரசாங்கக் கொள்வனவுகள் (G) | = | 100 |
| வரிகள் (T) | = | 80 |
| அரசாங்கத்திலிருந்தான வீட்டுத்துறைக்கான மாற்றல்கள் (Tr.) | = | 55 |

(அ) இப்பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை நிர்ணயிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) அரசாங்கக் கொள்வனவுகள் ரூபா 200 மில்லியன் ஆக அதிகரிக்குமாயின், புதிய சமநிலைத் தேசிய வருமான மட்டம் என்ன ? (02 புள்ளிகள்)

(இ) அரசாங்க செலவீட்டுப் பெருக்கியின் பெறுமதி யாது ? (02 புள்ளிகள்)

(ஈ) அரசாங்கம் ரூபா 2 000 மில்லியன் தேசிய வருமான மட்டத்தை அடைவதனை இலக்காகக் கொண்டுள்ளதாயின் அதற்கெனத் தேவைப்படும் மொத்த அரசாங்கக் கொள்வனவுகள் எவ்வளவாக இருக்க வேண்டும் ? (02 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(5) (i) - நுகர்வுச் சமன்பாட்டில் ‘a’ என்னும் குணகம் வாழ்க்கையைக் கொண்டு செல்லத்தேவையான மிகக் குறைந்தமட்ட நுகர்வுச் செலவீட்டின் அளவைக் குறிக்கும். இது நடைமுறை வருமான மட்டத்துடன் எவ்விதமான தொடர்களையும் கொண்டிருப்பதில்லை. நிகழ்கால வருமான மட்டம் பூச்சியமாக இருப்பினும் வாழ்க்கையை கொண்டுசெல்ல இக்குறைந்த பட்ச நுகர்வுச் செலவீட்டைக் கட்டாயம் மேற்கொள்ள வேண்டும்.

(02 புள்ளிகள்)

[மேற்படி விளக்கம் இன்றி ‘a’ என்பது தன்னிச்சையான / சுயாதீன நுகர்வு செலவீடு என்றோ அல்லது நுகர்வுச் சார்பின் இடைவெட்டுப்புள்ளி ஏன்றோ குறிப்பிடப்பட்டிருப்பின் 01 புள்ளி வழங்குக.]

- நுகர்வு சமன்பாட்டில் ‘b’ என்னும் குணகத்தால் காட்டப்படுவது எல்லை நுகர்வு நாட்டமாகும். செலவிடத்தக்க வருமானத்தில் ஏற்படும் மாற்றத்திற்கும் நுகர்வு செலவீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையிலான விகிதம் எல்லை நுகர்வு நாட்டமாகும்.

அதாவது = MPC ஆகும்

[மேற்படி விளக்கமின்றி ‘b’ என்பது நுகர்வு சமன்பாட்டின் சாய்வாகும்∴சரிவாகும் எனக்குறிப்பிடப்படின் 01 புள்ளி வழங்குக]

(ii) - யாதேனும் ஒரு தேசிய வருமான மட்டமானது அதன் பெறுமதியிலிருந்து மேல்நோக்கியோ அல்லது கீழ் நோக்கியோ மாற்றமடையும் போக்கினைக் கொண்டிருக்காதாயின் அத்தேசிய வருமான மட்டமானது சமநிலை தேசிய வருமான மட்டமெனக் கருதப்படும்.

(02 புள்ளிகள்)

PAPERMASTER.LK

திறந்த பொருளாதாரமொன்றில் மொத்த வெளியீடானது மொத்த செலவீட்டிற்குச் சமப்பட வேண்டும் (01 புள்ளி)

- $Y = E$

  $Y = C + I + G + (X - M)$

  (01 புள்ளி)

- $W = J$

  $S + T + M = I + G + X$

  (01 புள்ளி)

(iii) - மூடிய பொருளாதாரமொன்றில் திட்டமிட்ட முதலீட்டை விட திட்டமிட்ட சேமிப்பு அதிக பெறுமதியினை எடுக்குமாயின் (அதாவது ளு,1) பொருளாதாரத்தின் திட்டமிட்ட மொத்த செலவீடானது (நு) மொத்த வெளியீட்டை விட (லு) குறைவான பெறுமதியைக் கொண்டிருக்கும். (அதாவது லு,நு). இது சமநிலையற்ற ஒரு நிலையாகும். இதன் விளைவாக குறைவடைந்த மொத்த செலவீட்டிற்கு ஏற்ப வெளியீட்டு மட்டமும் சுருக்கமடையும். (02 புள்ளிகள்)

- மொத்த செலவீட்டை விட மொத்த வெளியீடு அதிகமாகும் போது இருப்புகள் அதிகரிக்கத் தொடங்கும். நிறுவனங்களின் திட்டமிடப்பட்ட இருப்புகளின் அளவை விட கூடுதலாக நிகழ்கால இருப்புகள் அதிகரிக்கும் போது நிறுவனங்கள் வெளியீட்டை குறைப்பதன் மூலம் திட்டமிட்ட இருப்பு மட்டங்களை பேண முயற்சி செய்யும். திட்டமிட்ட சேமிப்புக்கு திட்டமிட்ட முதலீடுகள் சமப்படும் வரை வெளியீடு சுருக்கமடையும் செயன்முறை தொடரும். சேமிப்பு முதலீட்டுக்கு சமமாகும் போது (ளுஸ்ரீஐ) வருமான மட்டமானது மீண்டும் சமநிலையை அடையும். இதன்போது திட்டமிடப்படாத இருப்பு மாற்றங்களெதுவும் காணப்படமாட்டாது. மொத்த வெளியீடு மொத்த செலவீட்டுக்கு சமமாகும். (02 புள்ளிகள்)

(iv) (அ) சமநிலைத் தேசிய வருமான மட்டம்

$$Y = C + I + G$$
$$Y = 50 + 0.8Yd + 120 + 100$$
$$Y = 50 + 0.8(Y - T + Tr) + 220$$
$$Y = 50 + 0.8(Y - 80 + 55) + 220$$
$$Y = 50 + 0.8Y - 64 + 44 + 220$$
$$Y = 270 + 0.8Y - 20$$
$$Y = 250 + 0.8Y$$
$$Y - 0.8Y = 250$$
$$0.2Y = 250$$
$$\underline{\underline{Y = 1250}}$$ மில்லியன் (01 புள்ளி)

(ஆ) அரசாங்கக் கொள்வனவுகள் 200 மில்லியனாக அதிகரிக்குமாயின் சமநிலைத் தேசிய வருமான மட்டம்

$$Y = 50 + 0.8Y_d + 120 + 200$$
$$Y = 50 + 0.8(Y - 80 + 55) + 320$$ (01 புள்ளி)
$$= 50 + 0.8Y - 64 + 44 + 320$$
$$= 350 + 0.8Y$$

PAPERMASTER.LK

$Y - 0.8Y = 350$

$0.2Y = 350$

$\underline{Y = 1,750}$ மில்லியன் (01 புள்ளி)

மாற்றீடான விடை :

$$K_G = \frac{1}{1 - b} = \frac{1}{1 - 0.8} = 5$$ (அரசாங்க செலவீட்டுப் பெருக்கி)

$\Delta G = 100 \longrightarrow \Delta Y = 100 \times 5 = 500$

புதிய சமநிலைத் தேசிய வருமான மட்டம் $= 1,250 + 500 = 1750$ மில்லியனாகும்.]

(இ) அரசாங்க லெவீட்டுப் பெருக்கி

$$K_G = \frac{1}{1 - MPC} = \frac{1}{1 - 0.8} = \frac{1}{0.2} = 5$$ (02 புள்ளிகள்)

(ஈ) ரூபா 2000 மில்லியன் தேசிய வருமான மட்டத்தை இலக்காகக் கொண்டால் அதனை அடையத் தேவையான அரசாங்கக் கொள்வனவின் பெறுமதி

தற்போதைய வருமானமட்டம் = 1750 மில்லியன்

இலக்கிடப்பட்ட வருமானமட்டம் = 2000 மில்லியன்

வருமானம் அதிகரிக்க வேண்டியளவு மில்லியன்

அரசாங்க செலவீட்டுப் பெருக்கி KG = 5

எனவே வருமான மட்டத்தை 250 ஆல் அதிகரிக்க வேண்டுமாயின்

$$(\Delta G) = \frac{(\Delta Y)}{K_G} = \Delta G = \frac{250}{5} = 50$$

$= 200 + 50 + = 250$

$= \underline{250}$ மில்லியன்

மாற்றீடான விடை :

$Y = C + I + G$

$2,000 = 50 + 0.8Y_d \ 120 + G$ (02 புள்ளிகள்)

$2,000 = 50 + 0.8(Y - T + Tr) + 120 + G$

$2,000 = 50 + 0.8(Y - 80 + 55) + 120 + G$

$2,000 = 50 + 0.8Y - 64 + 44 + 120 + G$

$2,000 = 150 + 0.8 (2,000) + G$

$2,000 = 150 + 16,00 + G$

$2,000 - 1,750 = G$

$250 = G$]

PAPERMASTER.LK

## உப பிரிவு ‘ஆ’

**வினா இலக்கம் 6**

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களைத் தெரிவு செய்க.)

**6.** (i) ‘பணம்’ என்பதனை வரைவிலக்கணப்படுத்தி, பண்டமாற்று முறையின் குறைபாடுகளை பணம் எவ்வாறு நிவர்த்தி செய்ததெனச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) கடன் அட்டைகள் பணமாகக் **கருதப்படாதது** ஏன் என்பதை விளக்குக. (02 புள்ளிகள்)

(iii) பொருளாதாரமொன்றில் பணத்திற்கான கேள்வியை நிர்ணயிக்கும் பேரினப் பொருளியல் மாறிகளைப் பட்டியற்படுத்தி, இம்மாறிகள் பணத்திற்கான கேள்வியை எவ்வாறு பாதிக்குமென்பதைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) கேள்வித்தூண்டல் பணவீக்கத்தையும் செலவுத்தூண்டல் பணவீக்கத்தையும் நீர் எவ்வாறு வேறுபடுத்துவீர ? அவசியமான வரைபடங்களைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) தற்போது இலங்கையின் உள்நாட்டுப் பணச்சந்தையில் அதி உயர்மட்டத்திலான மிகைத் திரவத்தன்மை நிலவுவதேன் ? வங்கி முறைமையின் மிகைத் திரவத்தன்மையை உறிஞ்சும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை ? (06 புள்ளிகள்)

### எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

(6) (i)

- பொருள்கள் மற்றும் சேவைகளைப் பரிமாற்றம் செய்யும் போது செலுத்தல்களின் (பரிமாற்ற) ஊடகமாகப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் எதுவும் பணமாகக் கருதப்படும். (02 புள்ளிகள்)
- நேரடிப் பரிமாற்றல்களுடன் தொடர்புடைய பண்டமாற்று முறையின் கீழ் பரிமாற்றமொன்று இடம்பெற வேண்டுமாயின் பரிமாற்றத்தில் ஈடுபடும் இரு தரப்பினரதும் விருப்பங்கள் பரஸ்பரம் பொருத்தப்பாடுடையதாக இருக்க வேண்டும். அதாவது இரட்டைப் பொருந்துகையுடையதாக இருக்க வேண்டும். இந்த நிபந்தனையை பூர்த்தி செய்வதென்பது மிகவும் சிரமமான ஒன்றாகும். பணப்பிரயோகம் இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறது. (01 புள்ளிகள்)
- போக்குவரத்துச் சிரமங்கள் (தூரப்பிரதேசங்களுடன் கொண்டு செல்லவேண்டும் அதன் பொருட்டு பரிமாறப்படும் பொருள்களை மீளக்கொண்டுவருதல் மிகக் கடினமானதும் செலவுகூடியதுமாகும்)
- பரிமாற்றத்தின் பொருட்டு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு நீண்டகாலமெடுத்தல்
- பரிமாற்றத்திற்கு தயாராக பொருள்களை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தலில் எதிர் நோக்கப்படும் சிக்கல்கள் மற்றொரு பிரச்சினையாகும்
- சிறு அலகுகளாகப் பிரித்து பரிமாற்றம் செய்வதில் காணப்பட்ட அசௌகரியங்கள் இன்னுமொரு இடர்பாடாகும். (ஏதேனும் ஒரு விடயத்திற்கு 01 புள்ளி)

(ii)

- கடன் அட்டைகள் பணமாகக் கருதப் படாமைக்கு காரணம் பணத்திற்கு இருக்க வேண்டிய பண்புகள் கடன் அட்டைகளில் இல்லாமையாகும். கடன் அட்டைகள் பெறுமானத் திரட்டாகத் தொழிற்படுவதில்லை மாறாக தற்காலிகமாக ஒரு பரிமாற்ற ஊடகமாகத் தொழிற்படும் பணியினை மட்டுமே ஆற்றுகிறது. (01 புள்ளி)
- கடனட்டைகள் ஒரு கம்பனியிடமிருந்து அல்லது நிதி நிறுவனமொன்றிடமிருந்து குறுங்காலக் கடனைப் பெற்றுக் கொள்ளும் ஒரு வழிமுறையாகும். குறுங்கால அடிப்படையில் கடனட்டை பரிமாற்ற ஊடகமாகத் தொழிற்பட்ட போதிலும் கடனட்டைக் கணக்கைத் தீர்ப்பதற்கு அதன் உரிமையாளன் பணத்தையே பயன்படுத்த வேண்டும். கடனட்டை மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல் அக்கணக்குக்கு பணத்தை வைப்பு செய்வதன் மூலம் தீர்க்கப்பட்ட பின்னரே பூரணமடையும். (01 புள்ளி)

(iii)

- மெய்வருமானம்
- வட்டிவீதம்
- விலைமட்டம்
- எதிர்பார்க்கப்படும் பணவீக்க வீதம்

PAPERMASTER.LK

(ஏதேனும் 2 காரணங்களுக்கு 02 புள்ளிகள்)

- கொடுக்கல் வாங்கல்களின் அளவைத் தீர்மானிக்கும் மிக முக்கிய காரணியாக அமைவது மெய்வருமானத்தின் அளவாகும். மெய்வருமானம் அதிகரிக்கும்போது கொடுக்கல் வாங்கல் செய்வதற்கான பரிமாற்ற நோக்கப் பணக்கேள்வியின் அளவும் அதிகரிக்கும்.

- வட்டிவீதமானது பண மீதிகளை கைவசம் வைத்திருப்பதற்கான அமையச் செலவினைக் காட்டும். வட்டி வீதம் அதிகரித்தால் பண இருப்புக்களை கைவசம் வைத்திருப்பதற்கான அமையச் செலவு அதிகரிக்கும். இதனால் பணத்திற்கான கேள்வி குறைவடையும் அதேவேளை அதற்குப் பதிலாக மாற்றீடான சொத்துகளில் அவை முதலீடு செய்யப்படும்.

- வட்டி வீதமானது உத்தேச நோக்கத்தின் ஊடாகவும் பணக்கையிருப்புகள் மீதான கேள்வியில் செல்வாக்கு செலுத்துகிறது. வட்டி வீதம் எதிர்காலத்தில் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுமாயின் அதன் மூலம் ஏற்படும் மூலதன அநுகூலங்களை அடையும் பொருட்டு பணக்கையிருப்புகள் மீதான கேள்வி குறைவடைந்து உண்டியல்கள், பிணையங்கள் போன்றவற்றின் மீதான முதலீடு அதிகரிக்கும்.

- விலைமட்டம் உயரும் போது கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதிகள் அதிகரிப்பதனால் பணக்கையிருப்புகளை அதிகளவில் வைத்திருக்க நேரிடும்.

- எதிர்கால பணவீக்க வீதம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுமாயின் பணக்கையிருப்புகளின் மெய்பெறுமதி குறைவடையக்கூடுமாகையால் பணத்தை வைத்திருப்பதற்கான கேள்வி குறைவடையும். பணத்திற்குப் பதிலாக மெய்ச் சொத்துகள் மீதான கேள்வி அதிகரிக்கும்.

(ஏதேனும் இரு விடயங்களுக்கு 02 புள்ளிகள்)

(iv) - மொத்த நிரம்பலுடன் ஒப்பிடுகையில் மொத்தக் கேள்வி அதிகம் விரிவடைவதால், பொருள்கள் சேவைகளின் விலைகள் உயர்வதனால் பொது விலை மட்டத்தில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பு கேள்வித் தூண்டல் பணவீக்கம் எனப்படும் (01 புள்ளி)

- வரைபட ரீதியில்







(சரியான வரைபடத்திற்கு 01 புள்ளி)

- செலவுத்தூண்டல் பணவீக்கத்தால் கருதப்படுவது உள்ளீடுகளின் விலை அல்லது உற்பத்திச்செலவு அதிகரிப்பதனால் மொத்த நிரம்பல் குறைவடைந்து பொருள்கள் சேவைகளின் விலை உயர்வினால் பொதுவிலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரிக்கும் நிலையாகும். மொத்த நிரம்பல் வளையியின் இடப்புற நகர்வின் மூலம் இது காட்டப்படும் (01 புள்ளி)

PAPERMASTER.LK

வரைபடத்தில் காட்டல் : செலவுத்தூண்டல் பணவீக்கம்.




(சரியான வரைபடத்திற்கு 01 புள்ளி)

(v) **உள்நாட்டு சந்தையில் மிகைத்திரவத்தன்மை நிலவக் காரணம்.**

- மத்திய வங்கியானது உரிமம் பெற்ற வங்கிகளுடன் (இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி) வெளிநாட்டு நாணயப் பரிமாற்று உடன்படிக்கைகளில் (SWAP arrangements) ஈடுபடுவதன் மூலம் அவ் வங்கிகள் மூலம் பெற்ற வெளிநாட்டு நாணயங்களை மத்திய வங்கி கொள்வனவு செய்தல்
- உள்நாட்டு நாணயச் சந்தையில் மத்தியவங்கி வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்தமை
- தனியார் துறையின் கம்பனி கடன்பத்திரங்கள் மற்றும் பங்குகளை வெளிநாட்டு முதலீட்டாளருக்கு வழங்குவதன் மூலம் பெற்ற வெளிநாட்டு நாணயங்களை மத்திய வங்கி கொள்வனவு செய்தல்
- மத்திய வங்கியானது முதனிலைச் சந்தையில் திறைச்சேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்தல்.
- மத்திய வங்கியின் இலாபத்தின் ஒரு பகுதியை அரசாங்கத்திற்கு வழங்குதல்.
- 2013 ஆண்டு ஜூலை மாத முதலாந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மத்திய வங்கியின் நியதி ஒதுக்கு வீதத்தை 200 அடிப்படைப் புள்ளிகளால் குறைத்தமை.
- வங்கிக்கட்டடைமப்பிலிருந்து வேறு தனியார் துறை நிறுவனங்கள் பெற்ற கடன்களினளவு வீழ்ச்சியடைந்தமை. (ஏதேனும் மூன்று விடயங்களுக்கு 03 புள்ளிகள்)

**மிகைத் திரவத்தன்மையை உறிஞ்சுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.**

- நாளாந்த திறந்த சந்தை நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல்.
- திறந்த சந்தை நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் மத்திய வங்கியிடமுள்ள அரச பிணையங்களின் அளவு போதாமையினால் மேலதிக திரவத் தன்மையை உறிஞ்சும் நோக்கில் ஏனைய நிறுவனங்களிடமிருந்து (உதாரணமாக ஊழியர்சேமலாப நிதி) கடனாகப் பெற்ற திறைசேரி உண்டியல்களைப் பயன்படுத்தல்
- தயார் நிலை வைப்பு வசதிகளை (Standing Deposit Facility) அறிமுகஞ்செய்தல்.
- ஓரிரவு மீள் கொள்வனவு ஏலங்களை நடத்தல்.
- வணிகவங்கிகளிடமுள்ள மிகைத் திரவத் தன்மையை தனியார் துறைக்கு கடன்வழங்குவதன் மூலம் உற்பத்தி நடவடிக்கைகளை நோக்கி திருப்பி விடுவதை ஊக்குவித்தல்.
- திறந்த சந்தை நடவடிக்கையில் பங்குபற்றுவோர் மேற்கொள்ளும் ளுனுகு பரிமாற்றங்கள் மாதமொன்றிற்கு 03 தடவைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தல்

PAPERMASTER.LK

(ஏதேனும் 03 விடயங்களுக்கு 03 புள்ளிகள்)

**வினா இலக்கம் 7**

**7.** (i) 'தூய பொதுப் பொருள்களையும்', 'மேன்மைப் பொருள்களையும்' வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) பொருள்களின் உற்பத்தியில் வெளிவாரிச் செலவுகள் காணப்படுகையில் சந்தை முறையானது வளங்களை வினைத்திறனாக ஒதுக்கீடு செய்ய முடியாமற் போவது எவ்வாறு என்பதனை பொருத்தமானதொரு வரைபடத்தைப் பயன்படுத்தி விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) விகிதசம வரி, விருத்திமுறை வரி, ஒடுங்குமுறை வரி என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (03 புள்ளிகள்)

(iv) 'வரியின் மிகைச் சுமை' (excess burden of taxation) என்பதனாற் கருதப்படுவதென்ன ? பொருளொன்றின் உற்பத்தியாளர் மீது அலகு வரியொன்று விதிக்கப்படும்போது ஏற்படும் வரியின் மிகைச் சுமையினை வரைபடமொன்றின் மூலம் காட்டுக. (05 புள்ளிகள்)

(v) "அரசாங்க வருவாயுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் பொதுப் படுகடன் நிலை மிகக் கவலைக்கிடமானதாகத் தோன்றுகிறது." இக்கூற்றினை விளக்குக. (03 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(07) (i)

- தூய பொதுப் பொருளொன்றின் நுகர்வை கட்டுப்படுத்த முடியாது. அவ்வாறான பொருளொன்றை நிரம்பல் செய்தால் . அப்பொருளிலிருந்து கிடைக்கும் நன்மைகளை நுகர்வோர் மத்தியில் கட்டுப்படுத்த முடியாது. பொதுப் பொருள்களில் காணப்படும் முக்கியமான பண்பு அவை கூட்டாக நுகரப்படுவதாகும். (01 புள்ளி)

- தூயப் பொதுப் பொருளொன்றின் நுகர்வில் போட்டித் தன்மை கிடையாது. ஒரு நபர் மேற்கொள்ளும் நுகர்வு காரணமாக மற்றொரு நபருக்கு அப்பொருளின் மூலம் கிடைக்கும் நன்மையில் குறைவேதும் ஏற்படாது. (01 புள்ளி)

- மேன்மைப்பொருள் என்பதனாற் கருதப்படுவது யாதெனில் ஏதேனும் ஒரு பொருளை அல்லது சேவையை நுகரும் போது அந்நுகர்வின் நன்மையை அப்பொருளை அல்லது சேவையை நுகர்வு செய்த நபருக்கு மட்டுமன்றி வெளியிலுள்ள தரப்பினருக்கும் அனுபவிக்கக் கூடியதாக இருப்பதாகும். அவ்வாறான பொருளொன்றின் நுகர்வின் தனியார் நன்மையை விட சமூகநன்மை கூடுதலாக காணப்படும்.
மேன்மைப் பொருள்களை சந்தையூடாக நிரம்பல் செய்யும் போது அப்பொருள்கள் குறை நுகர்வுக்கு உட்படக்கூடிய நிலைமை ஏற்படலாம்.
உதாரணம் : கல்வி, சுகாதார சேவைகள் (02 புள்ளிகள்)

(ii)

- உற்பத்தி செயன்முறையில் வெளிவாரிச் செலவுகள் ஏற்படும் போது வளங்களை வினைத்திறனான விதத்தில் ஒதுக்கீடு செய்வதில் சந்தை முறைமையானது தோல்வியடையக் காரணம் சந்தைகளில் தீர்மானம் எடுத்தல் செயன்முறையில் வெளிவாரிச் செலவுகளை உள்ளடக்காத படியினாலாகும்.

- உற்பத்திச் செயன்முறையில் வெளிவாரிச் செலவொன்று ஏற்படும் போது உற்பத்தியின் சமூக செலவு தனியார் செலவை விஞ்சியதாகக் காணப்படும். ஆயினும் சந்தையில் தீர்மானங்கள் எடுக்கப்படுவது தனியார் நன்மை மற்றும் தனியார் செலவு என்பவற்றை மட்டும் கருத்தில் கொள்வதன் மூலமாகும்.

- வெளிவாரிச் செலவுகளைக் கருத்தில் கொள்ளாதவிடத்து உற்பத்தியின் உண்மையான செலவு குறைமதிப்பீட்டிற்கு உட்படும் அதேவேளை, சந்தையில் தீர்மானிக்கப்படும் சமநிலை வெளியீடு சமூகரீதியில் உத்தமமான வெளியீட்டு மட்டத்தை விட உயர்வாக காணப்படும். அறவிடப்படும் விலை மிகக் குறைவாகக் காணப்படும். இதன் போது அருமையான வளங்கள் மிகைப் பயன்பாட்டிற்கு உட்படும். இது வளங்கள் வினைத்திறனற்ற விதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதைக் காட்டும். (03 புள்ளிகள்)

PAPERMASTER.LK

பொருத்தமான வரைப்படம்




- வெளிவாரிச் செலவினைக் கருத்திற் கொள்ளாவிடத்து சந்தையின் சமநிலை வெளியீடு ஞஅ ஆகும். வெளிவாரிச் செலவைக் கருத்திற் கொள்ளுமிடத்து சமூகரீதியில் உத்தமமான வெளியீட்டு மட்டம் ஞள ஆகும். (சரியான வரைப்படத்திற்கு 02 புள்ளிகள்)

(iii) - விகிதசம வரி :
வரி அடிப்படை விரிவாக்கமடையும் போது அறவிடப்படும் வரி வீதம் மாறாதிருக்குமாயின் அது விகித சம வரியாகும். வருமானத்தில் நிலையான ஒரு வீதம் வரியாக அறவிடப்படும். (01 புள்ளி)

- விருத்தி முறைவரி :
வரி அடிப்படை விரிவாக்கமடையும் போது அறவிடப்படும் வரி வீதம் படிப்படியாக அதிகரிக்குமாயின் அது விருத்தி முறை வரியாகும். இதன் போது பொருளாதார ரீதியில் வலுவான நிலையில் உள்ளோர் வலுக்குறைந்த நிலையில் உள்ளோரை விட அதிக சதவீதத்தை வரியாகச் செலுத்துகின்றனர். (01 புள்ளி)

- ஒடுங்கு முறை வரி :
வரி அடிப்படை விரிவாக்கமடையும் போது அறவிடப்படும் வரிவீதம் படிப்படியாக குறைவடைந்து செல்லுமாயின் அது ஒடுங்கு முறை வரியாகும். வருமானம் அதிகரிக்கும் போது வரிவீதம் குறைவடைந்தாலும் வரிச் செலுத்தலின் முழு அளவு அதிகரிக்க இடமுண்டு. (01 புள்ளி)

(iv) - வரியொன்று விதிக்கப்படும் போது சந்தையில், வீட்டுத்துறை மற்றும் உற்பத்தி நிறுவனங்களின் தீர்மானமெடுத்தல் செயன்முறை பிறழ்வுகளுக்கு உட்படுவதனால் வரியின் காரணமாக சுமக்க நேரிடும் பணரீதியான வரிச்சுமைக்கு மேலதிகமாக மற்றுமொரு மேலதிக சுமையொன்று பொருளாதாரத்தின் மீது ஏற்படுமாயின் அது வரிஅறவீட்டின் மிகைச் சுமை என அழைக்கப்படும்.

- வரியின் தாக்கம் காரணமாக உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் வீட்டுத்துறையினர் மேற்கொள்ளும் உற்பத்தி மற்றும் நுகர்வு பற்றிய தெரிவுகளை மாற்றியமைக்க வேண்டியேற்படும். உதாரணமாக பொருளொன்றின் மீது வரிவிதிக்கப்படும் போது விலை அதிகரிப்பதனால் வீட்டுத்துறையினர் கொள்வனவு செய்யும் அளவும் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் அளவும் குறைவடையலாம், உழைப்பு வருமானங்கள் (சம்பளங்கள்) மீது வரிவிதிக்கப்படும் போது நிரம்பல் செய்யப்படும் உழைப்பின் அளவை மாற்றியமைப்பதற்கான போக்கு காணப்படும்.

- வரிவிதிப்பின் காரணமாக இவ்வாறு தீர்மானமெடுக்கும் செயன்முறை பிறழ்வடைவதனால் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் பொருளாதார மிகையில் ஏற்படும் வீழ்ச்சியின் அளவு மிகைச் சுமையாக காட்டப்படலாம். இது பணரீதியில் ஏற்படும் வரிச்சுமைக்கு மேலதிகமாக ஏற்படும் ஒரு சுமையாகும். (03 புள்ளிகள்)

PAPERMASTER.LK

- வரியின் மிகைச் சுமையினை வரைப்பட ரீதியில் காட்டல்




(சரியான வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)

(v) - எழுச்சி பெற்றுவரும் நாடுகள் மத்தியில் பொதுப்படு கடன் சுமை அதிகமுள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். பொதுப்படு கடன் சுமையின் பருமனை பெரும்பாலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகவே காட்டுவதுண்டு. வரிச்சுமையின் உண்மை நிலையினை அதன் மூலம் காட்ட முடியாது. உதாரணமாக இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வரிச்சுமை பின்வருமாறு அமைந்தது.

2010 - 81.9%

2011 - 78.5%

2012 - 79.2%

2013 - 78.3%

இத்தரவுகளை நோக்கும் போது இலங்கையின் பொதுப்படுகடன் சாதகமான போக்கினைக் கொண்டிருப்பதாக எவரும் இலகுவில் முடிவு செய்யலாம்.

- ஆயினும் உண்மையில் இலங்கை மிக மோசமான விதத்தில் பொதுப் படுகடன் சேவைப் பிரச்சினையால் பீடிக்கப்பட்டுள்ளது. இதன் பாதிப்பின் அளவை சரியாக புரிந்து கொள்ள வேண்டுமாயின் கடன் அளவை மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுவதை விட பொருளாதாரத்தின் கடன் சேவை இயலளவை காட்டும் அரசாங்க வருவாயுடன் ஒப்பிட வேண்டும்.

அரசாங்கத்தின் கடன் அளவை அரசாங்கத்தின் மொத்த வருவாயின் சதவீதமாக காட்டுவோமாயின் அதன் அளவு துரிதமாக அதிகரித்து வருவதைக் காணலாம்.

2011 - 530%

2013 - 597%

2012 - 571%

2014 - 618%

கடன் சேவைக் கொடுப்பனவுகளை அரசாங்க வருவாயின் சதவீதமாகக் காட்டும் போதும் கவலைக்கிடமான நிலையே காணப்படுகிறது. 2011 -92.5% 2012 – 96.8% 2013 - 102.2% ஆகக் காணப்பட்டது. இது மிகவும் மோசமானதொரு நிலைமையாகும். அரசாங்கம் ஏனைய செலவுகளை பூர்த்தி செய்வது ஒரு புறமிருக்க பெற்றக் கடனை மீளச் செலுத்தவும் மீண்டும் கடன் பெறவேண்டிய நிலையில் உள்ளமை தெளிவானதாகும். இலங்கை ஏற்கனவே கடன் பொறிக்குள் சிக்கியுள்ளமையை இது உறுதிப்படுத்துகிறது. இந்நிலையிலிருந்து மீள உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளாவிடின் பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாமல் போகும் நெருக்கடியை இலங்கை எதிர் கொள்ள வேண்டி ஏற்படலாம். (03 புள்ளிகள்)

PAPERMASTER.LK

**வினா இலக்கம் 8**

**8.** (i) சர்வதேச வர்த்தகத்தின் மூலம் நாடுகள் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் எவை ? (04 புள்ளிகள்)

(ii) வர்த்தகப் பாதுகாப்புவாதத்துக்குச் சார்பாக முன்வைக்கப்பட்டுள்ள பிரதான பொருளியல் வாதங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) நாடொன்றின் சர்வதேச போட்டித்தன்மையை நிர்ணயிக்கும் காரணிகள் எவை ? (04 புள்ளிகள்)

(iv) கருதுகோள் ரீதியிலான பொருளாதாரமொன்றின் சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்குப் பரிமாற்றல்களின் சுருக்கம் பின்வரும் அட்டவணையிற் தரப்பட்டுள்ளது. (சகல இலக்கங்களும் ரூபா மில்லியனில்)

| வகை | பெறுகைகள் | செலுத்தல்கள் | வகை | பெறுகைகள் | செலுத்தல்கள் |
|---|---|---|---|---|---|
| வணிகப் பொருள்கள் | 800 | 1 200 | கடற் போக்குவரத்து | 180 | 150 |
| ஊழியர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் | 5 | 10 | வட்டி வருவாய்கள் | - | 35 |
| நிதிச் சேவைகள் | 25 | 30 | தொழிலாளர் பணவனுப்பல்கள் | 285 | 50 |
| பங்கிலாபங்கள் | 10 | 70 | பயணம் | 140 | 100 |
| விமானப் போக்குவரத்து | 100 | 60 | தொலைத்தொடர்புகள் | 75 | 30 |
| அரச மாற்றல்கள் | 15 | - | நாணயமல்லாத் தங்கம் | 5 | 55 |

மேலுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) வர்த்தக நிலுவை (01 புள்ளி)

(ஆ) பொருள்கள் சேவைகள் கணக்கு நிலுவை (01 புள்ளி)

(இ) முதனிலை வருமானக் கணக்கு நிலுவை (01 புள்ளி)

(ஈ) இரண்டாம் நிலை வருமானக் கணக்கு நிலுவை (01 புள்ளி)

(v) மிதக்கும் நாணய மாற்றுவீத முறையின் கீழ் பின்வரும் உள்நாட்டுக் காரணிகள் எவ்வாறு நாணய மாற்றுவீதத்தைப் பாதிக்குமென விளக்குக.

(அ) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு (02 புள்ளிகள்)

(ஆ) பணவீக்க வீதத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி (02 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(08) (i)

- சிறப்புத் தேர்ச்சியடைந்த துறையில் உற்பத்தியை மேற்கொள்ளும் போது வினைத்திறன் அதிகரிக்கும் அதேவேளை அது பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் ஏதுவாகும்.
- சர்வதேச போட்டித் தன்மை மற்றும் குறைந்த செலவில் இறக்குமதி செய்யக் கூடியதாக இருப்பதால் பணவீக்க அழுத்தங்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் வெகுவாகக் குறைவடையும்.
- திறந்த பொருளாதாரத்தின் மூலம் தொழில்நுட்பம் வளர்ச்சியடையவும், புத்தாக்கங்கள் ஊக்குவிக்கப்படவும், புதிய கருத்துக்கள், மற்றும் புதிய மனோபாவங்கள் நாட்டில் உள்வாங்கப்படவும் வாய்ப்பேற்படும்.
- ஏற்றுமதி நோக்கிய துறையில் வேலைவாய்ப்பில் உள்ளோர் உயர்ந்த சம்பளங்களையும் வருமானங்களையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பேற்படும்.
- வெளிநாட்டு வர்த்தகத்தின் மீது விதிக்கப்படும் வரிகள் மூலம் அரசாங்க வருவாய்கள் அதிகரிக்கும்.
- நாட்டினுள் உற்பத்தி செய்ய முடியாத பண்டங்களை நுகர வழியேற்படும்.
- ஏற்றுமதித்துறை விரிவாக்கம் வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கு உதவியாக இருக்கும்.

PAPERMASTER.LK

(ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(ii) **பாதுகாப்பு வாதத்திற்கு சார்பான பொருளாதார வாதங்கள்**

- இளநிலைக் கைத்தொழில்களைப் பாதுகாத்தல்
- குவித்தலைத் தடைசெய்தல்
- தந்திரோபாய ரீதியில் முக்கியத்துவம் மிக்க உற்பத்தி துறைகளை பாதுகாத்தல்
- தொழில் வாய்ப்புகளைப் பாதுகாத்தல்
- உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்தும் தேவை
- அரசாங்க வருவாயின் ஒரு மூலாதாரமாக இருத்தல்
- சென்மதி நிலுவையை உறுதிப்படுத்தல்
- சுயதேவைப் பூர்த்தியடைந்த தேசியப் பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்பல்

(ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(iii)
- விளைதிறன்
- பேரினப் பொருளாதார உறுதிப்பாடு
- உட்கட்டமைப்பு வசதிகள்
- ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மீதான முதலீடு
- வரிக் கட்டமைப்பு
- நாணய மாற்று வீத உறுதிப்பாடு
- உலக சந்தைக்கு தேவையான மனித முலதனத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறைமை
- வணிகஞ் செய்வதில் காணப்படும் செலவுகள் (ஊழளவ ழக னுழiபெ டீரளiநௌள)
- நிர்வாக முறையின் தன்மை
- ஊழியச் சந்தையின் நெகிழ்தன்மை
- அரசாங்க நிர்வாகத்தின் வினைத்திறன்
- தனியார் சொத்துரிமைப் பாதுகாப்பு
- சட்ட வாதிக்கம்
- நல்லாட்சி

(ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(iv) (அ) வர்த்தக நிலுவை = வணிகப் பொருள்கள் + நாணயமல்லாத தங்கம்

= (800 – 1200) + (5 – 55)

= – 400 + (–50)

= – 450 மில்லியன் ரூபாய் (01 புள்ளி)

(ஆ) பொருள்கள் சேவைகள் கணக்கு நிலுவை

பொருள்கள் + சேவைகள் = – 450 + சேவைகள்

சேவைகள் = கடற்போக்குவரத்து + விமானப் போக்குவரத்து + பயணம் + நிதி சேவைகள் + தொலைத் தொடர்புகள்

= [30 + 40 + 40 + (– 5) + 45]

சேவைகள் = 150

பொருள்கள் மற்றும் சேவைகள் கணக்கு நிலுவை

= – 450 + 150

= – 300 மில்லியன் ரூபாய் (01 புள்ளி)

(இ). முதனிலை வருமானக் கணக்கு நிலுவை

ஊழியர்களுக்கான இழப்பீட்டு கொடுப்பனவுகள் + பங்கிலாபங்கள் + வட்டி வருவாய்கள்

= – 5 + (-60) + (– 35)

= – 100 மில்லியன் ரூபாய் (01 புள்ளி)

(ஈ). இரண்டாம் நிலை வருமானக் கணக்கு நிலுவை

அரச மாற்றல்கள் + தொழிலாளர் பணவனுப்பல்கள்

= 15 + 235

= 250 மில்லியன் ரூபாய் (01 புள்ளி)

PAPERMASTER.LK

(v) (அ). மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும் போது இறக்குமதி உள்ளடங்கலாக பொருள்கள் சேவைகள் மீது எழுப்பப்படும் மக்களின் கேள்வியும் அதிகரிக்கும். இறக்குமதி மீதான கேள்வி அதிகரிக்கும் போது வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு செய்ய நிரம்பல் செய்யப்படும் உள்நாட்டு நாணயத்தின் அளவு அதிகரிக்கும். வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு செய்ய நிரம்பல் செய்யப்படும் உள்நாட்டு நாணயத்தின் அளவு அதிகரிக்கும் போது வெளிநாட்டு நாணயத்திற்கு சார்பாக உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடையும். நாணயப் பெறுமதி தேய்வடைதல் என இது கூறப்படும். (02 புள்ளிகள்)

(ஆ). பணவீக்க வீதத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

ஒரு நாட்டின் பணவீக்க வீதம் வீழ்ச்சியடையும் போது அந்நாட்டின் ஏற்றுமதி விலைகள் போட்டித் தன்மை வாய்ந்ததாக மாறும். ஏற்றுமதிகளுக்கான வெளிநாட்டவர்களின் கேள்வி அதிகரிக்கும் போது உள்நாட்டு நாணய அலகின் மீதான வெளிநாட்டவர்களின் கேள்வி அதிகரிக்கும். இதனால் வெளிநாட்டு நாணயத்திற்கு சார்பாக உள்நாட்டு நாணய அலகின் பெறுமதி அதிகரிக்கும். நாணய மாற்றுவீத பெறுமதி அதிகரிப்பென இது கூறப்படும்.

(02 புள்ளிக

PAPERMASTER.LK

**வினா இலக்கம் 9**

9. (i) அபிவிருத்தியின் ஓர் அளவை என்ற வகையில் தலைக்குரிய வருமானம் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகிறது ? (04 புள்ளிகள்)

(ii) உலக வங்கியானது நாடுகளை அவற்றின் தலைக்குரிய வருமான மட்டங்களை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு வகைப்படுத்துகிறது ? (04 புள்ளிகள்)

(iii) பொருளாதார வளர்ச்சியும் பேண்தகு அபிவிருத்தியும் ஒன்றோடொன்று பொருந்தாத தன்மை கொண்டவையா ? உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) புத்தாயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் இலங்கை எந்தத் துறைகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் கண்டுள்ளது ? (04 புள்ளிகள்)

(v) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வேலையின்மை வீதத்தைக் குறைவடையச் செய்வதில் பங்களிப்புச் செய்துள்ள முக்கிய காரணிகள் யாவை ? (04 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(09) (i) அபிவிருத்தியின் ஓர் அளவையென்ற வகையில் தலைக்குரிய வருமானத்தின் முக்கியத்துவம்.

- தலைக்குரிய வருமானம் நாடொன்றின் பௌதீக ரீதியிலான பொருள்கள் சேவைகளின் கிடைப்பனவைக் காட்டும் ஒரு குறிகாட்டியாகும் அபிவிருத்தியுடன் தொடர்புடைய தரத்திலேற்படும் பண்புசார் மாற்றங்களை அது பிரதிபலிப்பதில்லை.

- தலைக்குரிய வருமானங்கள் நாடொன்றின் வருமானப் பரம்பலின் தன்மையை சரியாகக் காட்டுவதில்லை தலைக்குரிய வருமானம் சமமாகக் காணப்படும் இரு நாடுகளில் வருமானப்பரம்பல் ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்டதாக அமைந்திருக்கலாம்.

- தலைக்குரிய வருமானம் அபிவிருத்தியுடன் தொடர்புடைய பேண்தகு அபிவிருத்தி பற்றிய அம்சங்களை முற்றிலும் கவனத்திற் கொள்வதில்லை, சூழல் மாசடைதல் இயற்கை மூலதனத் தேய்வு பற்றிய தகவல்களை தலைக்குரிய வருமானம் பற்றிய தரவுகளிலிருந்து பெறமுடியாது.

- சுதந்திரம், சுகாதாரம், மனித உரிமை போன்ற வருமானம் சாராத அபிவிருத்தியின் ஏனைய பண்புகள் குறித்து தலைகுரிய வருமானம் கவனஞ் செலுத்துவதில்லை.

- முறைசாரா துறையின் உற்பத்தி பெறுமதிகள் சரியாகப் பிரதிபலிக்காத படியினால் நாட்டின் உற்பத்தி மட்டமும் கூட குறை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கலாம்.

- சர்வதேச ஒப்பீட்டின் பொருட்டு தலைக்குரிய வருமானத்தைப் பயன்படுத்தும்போது அமெரிக்க டொலர்களில் அது வெளிப்படுத்தப்படுகிறது. இதன் பொருட்டு நாடுகளின் பெயரளவு நாணய மாற்று வீதம் பயன்படுத்தப்படுகிறது. பெயரளவு நாணயமாற்று வீதம் நாடுகளிடையே நிலவும் பணவீக்க வேறுபாடுகளை சரியாகப் பிரதிபலிக்காத காரணத்தினால் நாடுகளின் வாழ்க்கைத்தர வேறுபாடுகளை இனங்காண முடியாதுள்ளது.

- அபிவிருத்தியுடன் தொடர்புடைய வறுமை , வேலையின்மை போன்ற சமூக பொருளாதார மாறிகளின் நடத்தைகளை தலைக்குரிய வருமானம் பற்றிய தரவுகள் பிரதிபலிப்பதில்லை.

- தலைக்குரிய வருமானம் பற்றிய பல்வேறு விமர்சனங்கள் மற்றும் குறைபாடுகள் இருந்தபோதிலும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை அளவிட இன்றும் பெருமளவில் அது பயன்படுத்தப்படுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியாகிய பொருளாதார வளர்ச்சி வீதமானது நாடொன்றின் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் முக்கியமானதொரு மாறியாகும். அபிவிருத்தியுடன் தொடர்புடைய எழுத்தறிவு, சுகாதார வசதிகள், கல்வி போன்ற முக்கியமான மாறிகள் தலைக்குரிய வருமான மட்டத்துடன் தொடர்புபட்டுள்ளன.

(ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

PAPERMASTER.LK

(ii) - குறைந்த வருமானம் பெறும் நாடுகள்
- கீழ்மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடுகள்
- மேல்மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடுகள்
- உயர் வருமானம் பெறும் நாடுகள்

(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)

(iii) - பொருளாதார வளர்ச்சியின் காரணமாக வருமான மட்டம் அதிகரிப்பதனாலும் பௌதீக வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உயர் வருமானமட்டமொன்று அத்தியாவசியமானதென்பதாலும் பொருளாதார வளர்ச்சியானது பேண்தகு அபிவிருத்திக்கு அத்தியாவசியமானதொரு காரணியாகக் கொள்ளப்படுகிறது.

- எவ்வாறாயினும் பொருளாதார வளர்ச்சிச் செயன் முறையின் காரணமாக பொருளாதாரத்தின் அருமையான வளங்களின் பயன்பாடு துரிதமாக அதிகரிக்கவும் இயற்கை வளங்கள் தேய்வடையவும் சமூக ஏற்றத் தாழ்வுகள் ஏற்படவும் கூடும். நிகழ்காலத்தில் வருமான மட்டம் துரிதமாக அதிகரிப்பது எதிர் கால வருமானச் சாத்தியங்கள் குறைவடைவதற்கும் காரணமாகலாம்.

- பொருளாதார வளர்ச்சிக்கும் வேண்தகு அபிவிருத்திக்கும் இடையில் முரண்பாட்டினை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் காணமுடியாது. பொருளாதார வளர்ச்சியானது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சூழல் பாதிப்புக்கு இட்டுக் செல்வதில்லை, பொருளாதார வளர்ச்சிச் செயன்முறையின் ஆரம்பக் கட்டங்களில் சூழல் பாதிப்புக்கள் ஏற்பட இடமுண்டாயினும், தலைக்குரிய வருமானம் துரிதமாக அதிகரிக்கும் போது இந்நிலையினைக் காணமுடியாது. மாறாக சுற்றாடலின் தர அதிகரிப்புக்கு அது இட்டுச் செல்லும்.

- சூழல் பாதிப்பானது பெரும்பாலும் சனத்தொகையுடன் தொடர்பு பட்டுள்ளது. ஆனால் சனத்தொகையானது பொருளாதார வளர்ச்சியுடன் எதிர்க்கணிய ரீதியில் தொடர்புபட்டுள்ளது. இதன்படி உயர் பொருளாதார வளர்ச்சியானது சூழலுக்கு சிநேகபூர்வமானது எனக்கருதலாம்.

- மேலும் பொருளாதார வளர்ச்சி செயன்முறையின் காரணமாக சமூகத்தின் வருமான மட்டம் அதிகரிப்பதாலும் நபர்களின் அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதாலும் சமூகத்தின் விழுமியங்கள் மதிப்பீடுகள் மற்றும் எண்ணங்கள் மாற்றமடையலாம். சமூக ஏற்றத்தாழ்வு மற்றும் சுற்றுச் சூழற் பிரச்சினைகள் தொடர்பில் அதிக கவனஞ் செலுத்தப்படும். சூழற் சிநேகபூர்வமான பண்டங்களின் நுகர்வுக்கு மக்கள் மென்மேலும் பழக்கப்படுவர். மேலும் சூழலுக்கு சிநேகபூர்வமான உற்பத்தி நுட்ப முறைகளும் பயன்படுத்தப்படும்.

- பொருளாதார வளர்ச்சியுடன் வருமான மட்டமும் அதிகரிக்கும் போது, தொழில் நுட்பம், ஆய்வு மற்றும் அபிவிருத்தி போன்ற துறைகளில் அதிகளவு முதலீடுகள் மேற்கொள்ளப்படும். தொழில் நுட்ப முன்னேற்றம் காரணமாக மீளுருவாக்க முடியாத வளங்களின் பயன்பாட்டைக் கட்டுப் படுத்தி, சுற்றாடலின் மீது ஏற்படும் பாதிப்புக்களை மிகவும் முறைந்த மட்டத்தில் வைத்திருக்க முடியும்.

(ஏதேனும் 04 விடங்களுக்கு 04 புள்ளிகள்)

(iv) - 2015 ஆண்டுக்கு முன் வருமான வறுமையை அரைவாசியாகக் குறைத்தல்
  - சனத்தொகையில் வறியவர்களின் சதவீதத்தை குறைத்தல்
  - வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் சதவீதத்தை குறைத்தல்.
- 99.7% ஆகவுள்ள ஆரம்பக்கல்வியில் பிரவேசிக்கும் சதவீதத்தை 100% வரை அதிகரித்தல்
- முதலாம் வகுப்பில் பிரவேசிக்கும் மாணவர்களில் 5ஆம் ஆண்டு வரையில் கல்விகற்கும் மாணவர் சதவீதத்தை 100% ஆக அதிகரித்தல்.
- 15 – 24 வயதுக்குட்பட்ட ஆண்/பெண் இருவாலாரினதும் எழுத்தறிவினை 100 % வரை அதிகரித்தல்.
- முதனிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை கல்வியில் ஈடுபடும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் பெண் பிள்ளைகளின் சதவீதங்களை 100% வரை அதிகரித்தல்.
- குழந்தை மரணங்களின் எண்ணிக்கையை குறைத்தல்

PAPERMASTER.LK

- 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மரண சதவீதத்தை குறைத்தல்
- சிசு மரண வீதத்தை குறைத்தல்
- சின்னம்மை நோய்த்தடுப்பூசி பெற்ற 1 வயதாகும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- தாய் சுகாதார நிலையினை மேம்படுத்தல்
- தாய் மரணவீதத்தை குறைத்தல்
- சுகாதார சேவை உதவியாளரின் மேற்பார்வையின் கீழ் இடம் பெறும் பிரசவங்களின் எண்ணிக்கையை 100% ஆக அதிகரித்தல்.
- மலேரியா நோய்த்தாக்கத்தினால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக் கையை பூச்சியமாக்குதல் சயரோகத்தினால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையை குறைத்தல்.

(ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(v)
- சார்பளவில் உயர் பொருளாதார வளர்ச்சி வீதத்தைப் பேணியமை
- சேவைத்துறையில் ஏற்பட்ட துரிதமான விரிவாக்கம்
- கட்டுமானக் கைத்தொழிற்துறையின் துரித வளர்ச்சி
- இராணுவ சேவைக்கும் அரசாங்க சேவைக்கும் ஆட்சேர்ப்புக்கள் அதிகரித்தமை
- வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களின் பொருட்டு ஊழியர் குடியகல்வு அதிகரித்தமை.
- சுயதொழில் வாய்ப்புக்களை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு கடன் வசதிகளை அறிமுகப்படுத்தியமை.

(ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

PAPERMASTER.LK

**வினா இலக்கம் 10**

10. (i) "அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் மூலாதாரங்கள் பெருமளவில் வர்த்தகம் சாராத உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் (domestic non-tradable economic activities) செல்வாக்குக்கு உட்பட்டிருந்தன." இந்நடவடிக்கைகளை இனங்காண்க. (05 புள்ளிகள்)

(ii) "அண்மைய தசாப்தங்களில் இலங்கையில் பெண்கள் தொழிற்படை பங்குபற்றல் வீதம் சார்பளவில் கீழ்மட்டத்தில் தேங்கிய நிலையிலுள்ளது." தொழிற்படையில் பெண்களின் பங்குபற்றல் வீதம் குறைவாக இருப்பதற்கான காரணங்கள் எவை ? (05 புள்ளிகள்)

(iii) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வரி வருவாய்கள் குறைவடைந்து வருவதற்கான காரணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) நடுத்தரகால அடிப்படையிலும் நீண்டகால அடிப்படையிலும் உயர் வளர்ச்சி வீதத்தை அடைவதற்கான தடைகளாக இலங்கைப் பொருளாதாரத்தில் காணக்கூடிய அடிப்படைப் பலவீனங்களை இனங்காண்க. (05 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

(10) (i) வர்த்தகம் சாரா வெளிநாட்டு நடவடிக்கைகள்

- கட்டுமானம் (உட்கட்டமைப்பு அபிவிருத்தி)
- போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பு
- உள்நாட்டு வர்த்தகம் (மொத்த சில்லறை வர்த்தகம்)
- ஹோட்டல்களும், உணவகங்களும்
- அரச பொதுநிர்வாகம் (ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி மொத்தம் 5 புள்ளிகள்)

PAPERMASTER.LK

(ii) - குடும்பப் பொறுப்புக்களை ஏற்கும் நோக்கில் பெண்கள் தொழிற்படையிலிருந்து விலகியமை (குழந்தைகளையும் முதியோரையும் பராமரித்தற்பொருட்டு)

- வினைத்திறனான குழந்தைப் பராமரிப்பு முறையொன்று இல்லாமை
- பாதுகாப்பான தங்குமிட வசதியின்மை
- வேலைத் தளத்திற்கு சென்று வருவதற்கு போக்குவரத்து வசதியின்மை
- வேலை நேரத்துடன் ஒத்து போவதில் ஏற்படும் வசதியீனங்கள்.
- தற்காலிகமாக வேலையிலிருந்து விலகிய பின்னர் மீண்டும் ஒரு தொழிலைப் பெறமுடியாமை
- பெண்களுக்கான வேலை வாய்ப்புக்கள் குறிப்பிட்ட சில துறைகளில் மாத்திரம் வரையறுக்கப்பட்டமை. குறிப்பாக தனியார் துறையில் ஆண் பெண்களின் சமூக தராதரங்களை அடிப்படையாக கொண்டு சம்பளவேறுபாடுகள் நிலவுகின்றது. தனியார் துறையில் இச்சம்பள இடைவெளி 2009 ஆண்டில் 35மூ ஆக இருந்துள்ளது
- பாரம்பரியம் சம்பிரதாயங்கள் சார்ந்த மனப்போக்குகள் - ஆண்கள் உழைக்கப் பிறந்தவர்கள் பெண்கள் குடும்பப் பொறுப்பைச் சுமக்கப் பிறந்தவர்கள் என்ற மனோபாவம்

(ஏதேனும் 5 விடங்களுக்கு 05 புள்ளிகள்)

(iii) - வெளிநாட்டு வர்த்தகத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த தீர்வைகள் பொருளாதாரத் தாராளமயமாக்கலைத் தொடர்ந்து நீக்கப்பட்டமை.

- உலக வர்த்தக நிறுவனத்தின் ஓர் அங்கத்தவரென்ற வகையில் தீர்வைக் கட்டுப்பாடுகள் பல தளர்த்தப்பட்டமை.
- வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவரும் பொருட்டு வரி விடுதலைகளையும் வரிச்சலுகைகளையும் வழங்கியமை
- வரி அடித்தளத்தை விரிவாக்கம் செய்யாமல் வரி வீதங்களை குறைத்தமை
- அரசாங்கத்தின் குறுங்கால நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வரிக்கட்டமைப்பில் அடிக்கடி மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் காரணமாக வரிக்கட்டமைப்பின் நிச்சயத்தன்மை பாதிக்கப்படுவதுடன் சிக்கல் தன்மை வாய்ந்ததாக மாறுகின்றமை.
- பெரியதொரு முறைச்சாராத் துறை இருப்பதன் காரணமாக வரி ஏய்ப்பு மற்றும் வரிப்புறக்கணிப்பு என்பவற்றுக்கான வாய்ப்பு அதிகமாகும்.
- வரி முகாமைத்துவத்தில் நிலவும் வினைத்திறனின்மை
- வரி செலுத்தலுக்கு எதிரான பொது மக்கள் மற்றும் கம்பனிகள் மத்தியில் காணப்படும் மனோபாவங்கள்.
- இணையத்தின் ஊடான பொருள் கொள்வனவு அதிகரித்துள்ளமை

(ஏதேனும் 5 விடயங்களுக்கு 05 புள்ளிகள்)

(iv) - அரசாங்கக் கடன் சுமை உயர் மட்டத்தில் உள்ளமை

- பாதீட்டுக் குறைநிலை உயர் மட்டத்தில் உள்ளமை
- வர்த்தக நிலுவைக் குறைநிலை விரிவடைந்து செல்கின்றமை
- அரசாங்க வருவாய்களின் மந்த கதியிலான வளர்ச்சி
- உள்நாட்டுச் சேமிப்புக்கள் குறைந்த மட்டத்தில் உள்ளமை
- பொருளாதார கொள்கைகள் பற்றிய நிச்சயமற்ற தன்மை
- மனித வள அபிவிருத்திக்கு வாய்ப்பான கல்விக் கொள்கையொன்று காணப்படாமை
- அரசாங்க நிர்வாக கட்டமைப்பு வினைத்திறனற்றுக் காணப்படல்
- நல்லாட்சி நிலவாமை

(ஏதேனும் 5 விடயங்களுக்கு 05 புள்ளிகள்)

PAPERMASTER.LK

# பகுதி III

## 3.0 விடையளித்தலின்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

### 3.1. விடையளித்தலின்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

**பொதுவான அறிவுறுத்தல்கள்**

* வினாப்பத்திரத்திலுள்ள பிரதான அறிவுறுத்தல்களை நன்றாக வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது ஒவ்வொரு பகுதியிலுமிருந்து எத்தனை வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும், எந்த வினா கட்டாயமானது, எவ்வளவு காலம் வழங்கப்பட்டுள்ளது, போன்றன பற்றியும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதுடன் வினாக்களை நன்கு வாசித்து சரியான தெளிவைப் பெற்று வினாக்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். ஒரே வினா இரு பிரிவுகளாக ஒன்றாகக் எழுதிக் காணப்படும் சந்தர்பபத்தில் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அவ்விரு பிரிவுகளுக்கும் விடையளிப்பதில் நீங்கள் அவதானத்தைச் செலுத்தல் வேண்டும்.

* வினாப் பத்திரம் I இன் வினாக்களுக:கு விடையளிக்கும்போது மிகச் சரியான ஒரு விடையை மட்டுமே தெரிவுசெய்ய வேண்டும். அத்தோடு தெளிவான ஒரு புள்ளடியினை மாத்திரம் விடைத்தாளில் இடுதல் வேண்டும்.

* வினாப்பத்திரம் II இன் (அ) மற்றும் (ஆ) பகுதிகளின் வினாக்களுக்கு விடையளிக்கும்போது எல்லா பிரதான வினாக்களையும் புதிய பக்கத்தில் எழுதத் தொடங்க வேண்டும்.

* விடைகள் சரியானதும் தெளிவானதுமான கையெழுத்தில் எழுதப்படல் வேண்டும்.

* பரீட்சார்த்திகள் விடைத்தாளின் எல்லாப் பக்கங்களிலும் உரிய இடங்களில் தமது சுட்டெண்ணை எழுதுதல் வேண்டும்.

* வினா இலக்கம், உபபிரிவுகளின் இலக்கங்கள் சரியாக எழுதப்பட வேண்டும்.

* சரியான சுருக்க விடையளிக்கத் தேவையான சந்தர்ப்பத்தில் விரிவாக விடையளிப்பதை தவிர்ப்பதோடு, விரிவாக விடையளிக்கத் தேவையான சந்தர்ப்பத்தில் சுருக்கமாக விடையளித்தலையும் தவிர்த்தல் வேண்டும்.

* வினாவில் கேட்கப்பட்டுள்ளவாறு விடைகள் தர்க்கரீதியாகவும், பகுப்பாய்வு முறையிலும் காரணிகளை முன்வைத்தல் வேண்டும்.

* விடையெழுதும்போது சிவப்பு, பச்சை நிற மை பேனாக்களை பாவித்தலைத் தவிர்க்கவும்.

* விடைக்குரிய புள்ளிகளின் அளவு, நேரம் என்பவற்றுக்கிடையில் காணப்படும் தொடர்புகளுக்கேற்ப நேரத்தை முகாமை செய்தல் வேண்டும்.

PAPERMASTER.LK

## விசேட அறிவுறுத்தல்கள்

* பொருளியல் பாடத்தில் பயன்படுத்தப்படும் கலைச் சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.
  உதாரணம் - நுகர்வு

* தேவையான இடங்களில் புள்ளிவிபர ரீதியான அட்டவணைகள், வரைபுகள், சமன்பாடுகள் மூலமாக விடைகள் விளக்கமளிக்கப்பட வேண்டும். வரைபுகளை சரியான அளவுத்திட்டத்திற்கேற்ப வரைவதிலும் அச்சுகளைச் சரியாகப் பெயரிடுவதிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

* கணித்தல்களின்போது ஒவ்வொரு படிமுறையையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். தேவையான சந்தர்ப்பத்தில் சரியான அலகுகளைக் குறிப்பிடல் வேண்டும்.

* தேவையான இடங்களில் சரியான குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டும்.

* உரிய வரைபடங்களை வரையும்போது கோடுகளைச் சரியாகப் பெயரிடவும் அதன் பெயர்ச்சிகளின் திசைகளை சரியாகக் குறிப்பிட வேண்டும்.

PAPERMASTER.LK

வரைபு தொடர்பான ஆலோசனைகள்:

* தரவுகளுக்கேற்ப வரைபுகள் வரையும்போது வரைபு தாள் பயன்படுத்துவது மிக முக்கியமாகும். வரைபுதாள் பயன்படுத்தாததால் சரியாக கணிப்பீடு மேற்கொள்ளப்படாமையை விண்ணப்பதாரிகளுக்கு புள்ளிகள் இழக்கப்படுவதாக புள்ளியிடலின்போது புலப்படுகின்றது.

* அச்சுகளைச் சரியாக பெயரிடாமையும் வரைபுகளைப் பெயரிடாமையும் புள்ளிகள் குறையக் காரணமாகும்.
உதாரணம் : உற்பத்தி சாத்திய எல்லை வளையியை பெயரிடும்போது X உம் Y உம் எனப் பெயரிடுவதற்குப் புள்ளி வழங்க முடியாது. அது X பண்டம் Y பண்டம் எனப் பெயரிடல் வேண்டும்.

* வரைபை வரையும்போது இடைவெட்டைச் சரியாகப் பெயரிடாமை புள்ளிகள் குறையக் காரணமாகும்.
உதாரணம் : நிரம்பல் கோட்டை வரையும்போது அங்கு எதிர்கணிய இடைவெட்டுப் புள்ளி ஆரம்பிக்குமாயின் அதன்படி வரைபை வரைய வேண்டும்.

உதாரணம் :




மொத்தச் செலவு வளையிலும் சுயாதீன செலவின் அளவினை வரைபில் சரியாகக் காட்ட வேண்டும்.

உதாரணம் :




* அச்சுக்களில் பதியும்போது அளவுத்திட்டத்தின்படி புள்ளியிடுவது முக்கியமாகும். தூரத்தை சுருக்கி பெயரிடல் பொருளியல் வரைபுகளின்போது சரியன்று.
உதாரணம் :




* பேரினப் பொருளாதார சமநிலையைக் காட்டும்போது வருமானம், செலவுகளைக் குறிக்கும்போது இரு அச்சுகளிலும் தரவுகளைச் சமனாகும்படி புள்ளியிட்டு சமவருமானச் செலவுக்கோடுகளை வரைய வேண்டும். அதேபோல சுய மாற்றமும் வருமான கிடையச்சில் குறிப்பிடல் வேண்டும்.

உதாரணம் :




PAPERMASTER.LK

* பேரின பொருளாதார சமநிலையைச் காட்டும்போது வெளிப்பாய்ச்சலைக் காட்டும் எதிர்க்கணிய இடைவெட்டினால் ஆரம்பிக்கப்படுமாயின் அதனை சரியாகக் காட்டப்படல் வேண்டும்.

உதாரணம்




* குறிப்பு : வளையியை வரையும்போது இரு அச்சுக்களையும் தொடும் வகையில் வரைவது மிக முக்கியமாகும். அப்படி அமையாவிட்டால் அது உற்பத்திச் சாத்திய எல்லையாக மாட்டாது.

## 3.2. கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும்

* எண்ணக்கருக்கள் தொடர்பான சரியானதும் உறுதியானதுமான அறிவு இருக்க வேண்டியதுடன், எண்ணக்கருக்கள் தொடர்பான பிரயோகப் பயன்பாடுகளை மேம்படுத்த வேண்டும்.

* பொருளாதார மற்றும் சமூகக் காரணிகள் தொடர்பாக காலத்துக்குக் காலம் ஏற்படுகின்ற மாற்றங்கள், போக்குகள் தொடர்பாக திருப்திகரமான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

* இதற்காக இலங்கை மத்திய வங்கி, குடிசன தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், நிதியமைச்சு ஆகிய நிறுவனங்களால் வெளியிடப்படும் அறிக்கைகள், பிரசுரங்கள் என்பவற்றை பரீட்சிப்பதற்கும் பழக்கப்பட வேண்டும். அதன் மூலம் தமது அறிவை இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டும்

PAPERMASTER.LK